# கல்வெட்டு



தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் காலாண்டு இதழ்

இதழ் 6 ★ இராட்சச ஆண்டு ஆடித் திங்கள் ★ விலை. ரு. 1-50.

# புவனேகவீரன் காசு

இரா. நாகசாமி

தமிழகத்தில் கிடைத்துள்ள காசுகளில் 'புவனேகவீரன்' 'சமர கோலாகலன்' என்ற பெயர் பொறித்துள்ள காசுகள் கிடைத்துள்ளன. இக்காசுகள் பாண்டியர் காசுகளாக இருக்கலாம், என்று முன்னர் ஆராய்ச்சி செய்த எல்லியட்,[1] தேசிகாச்சாரி[2] ஆகியோர் கருதினர்கள். இக்காசுகளில் சிறப்பாக ஆறு வகைகள் இருக்கின்றன.

வகை 1 :-

தலே : ஒரு மீன். அதன் மீது கருடன் அமர்ந்து காணப்படுகிறது. அதன் இருபுறமும் சங்கும் சக்கரமும் காணப்படுகின்றன.

பூ : 'சமரகோலாகலன்' என்று பெயர் எழுதப்பட்டுள்ளது. எழுத்துக்களின் இடையில் கோடு உள்ளது.[3]

வகை 2 :-

தலே : கருடன், சங்கு, சக்கரம் உள்ளன.

பூ : 'சமரகோலாகலன்' என்று பொறித்துள்ளது. எழுத்துக்களின் இடையில் கோடு உள்ளது.[4]

வகை 3 :-

தலே : கருடன். சங்கும், சக்கரமும் உள்ளன.

பூ : 'சமரகோலாகலன்' என்னும் தமிழ் எழுத்துக்கள். இடையில் கோடு இல்லே. வகை 1, 2-ஐ விட காலத்தால் முற்பட்டதாகத் தெரிகிறது.[5]

வகை 4 :-

தலே : அமர்ந்த கருடன். சங்கும், சக்கரமும் உள்ளன. கருடனுக்கு மேல் அழகிய குடை ஒன்று உள்ளது.

பூ : 'புவனேகவீரன்' என்ற பெயர் தமிழில் எழுதப்பட்டுள்ளது.[6]

வகை 5 :-

தலே : கருடன் உள்ளது. கருடன் கையில் பாம்பை பிடித்துள்ளது.

பூ : 'புவனேகவீரன்' என்று பொறிக்கப்பட்டுள்ளது.[7]

வகை 6 :-

தலே : கருடன் உள்ளது. சங்கும் சக்கரமும் உள்ளன.

பூ : இரண்டு மீன்கள். ஒன்றை ஒன்று பார்த்த நிலேயிலும் இடையில் செண்டும் உள்ளன. எழுத்துக்கள் ஏதும் இல்லே.[8]

இக்காசுகள் எழுத்தின் அமைதியைக்கொண்டு கி.பி. 14-15-ஆம் நூற்ருண்டைச் சார்ந்தவை என்று நான் குறிப்பிட்டுள்ளேன்.[9] 'இவை பாண்டியர் காசுகள் அல்ல. 14-15-ஆம் நூற்ருண்டில் மதுரை, இராமனுதபுரம் பகுதியில் ஆண்ட சுந்தரத்தோளுடையான் மாவலிவாணுதராயன்



படம் 1. மீன் மேல் கருடன்–சமரகோலாகலன் என்னும் பெயர்.



படம் 2. கருடன்-சமரகோலாகலன் என்னும் பெயர்.



படம் 3. கருடன்-புவனேகவீரன் என்னும் பெயர்.

காசுகளாக இருக்கலாம். அவர்கள் விஜயநகர மன்னர்களின் சமயமான வைணவத்தைத் தழுவியிருக்கவேண்டும். அதனால்தான் அவர்கள் காசுகளில் கருடனைப் பொறித்துள்ளனர்' என நடன. காசிநாதன் குறித்துள்ளார்.[10] அவரது குறிப்பு மிகவும் பொருத்தமே. இக்காசுகளைப் பற்றி மேலும் சில புதிய கருத்துக்களை இக்கட்டுரையில் குறிக்கிறோம்.

இக்காசுகளைப் பற்றி அறிந்துகொள்ள புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள மூன்று கல்வெட்டுக்கள் உதவுகின்றன. புதுக்கோட்டை மாவட்டம் திருமெய்யம் தாலுகா சேவலூரில் மாவலிவாணாதராயர் கல்வெட்டு ஒன்று உள்ளது.[11] அதில் அவனது கீழ்வரும் பட்டங்கள் காணப்படுகின்றன.

| | |
|---|---|
| மூவராயர் கண்டன் | பட்டமானங்காத்தான் |
| மதியாத மன்னர் மணவாளன் | வீர கஞ்சுகன் |
| சமரகோலாகலன் | வீர பிரதாபன் |
| புவனேகவீரன் | திருமாலிருஞ்சோலை நின்றான் |
| பூபாலகோபாலன் | மாவலிவாணாதராயர் |

இவனுக்கு 'சுந்தரத் தோளுடையான்' என்ற பெயரும் உண்டு என்பது இவன் ஏற்படுத்திய சந்திக்கு 'சுந்தரதோளுடையான் சந்தி' என்று பெயர் உள்ளதிலிருந்து தெரிகிறது.

இதே மாவட்டம் இதே தாலுக்கா நெக்கோணம் என்னும் ஊரிலும் இவனது கல்வெட்டு கிடைத்துள்ளது.[12] முன் கல்வெட்டில் குறித்துள்ள பட்டங்களுடன் மேலும் சில பட்டங்களும் இதில் உள்ளன. அவை பின்வருமாறு;

| | |
|---|---|
| பரராஜ தண்டதரன் | பாண்டியகுலாந்தகன் |
| சேதுமூலரக்ஷாதுரந்தரன் | ராஜகுலஸர்ப்ப கருடன் |
| மதுராபுரி மகாநாயகன் | கருடகேதனன் |
| வழுதிசேகரன் | |

என்பவையாகும். இக்கல்வெட்டிலும் சமரகோலாகலன், புவனேகவீரன் என்ற பட்டப் பெயர்கள் உள்ளன. இவனது பெயர் 'சுத்தரதோளுடையான் மகாபலிவாணாதிராஜன்' என்று கொடுக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு சகம் 1405 (1483 கி.பி.)-இல் எழுதப்பட்டுள்ளது.

இவன் கருடனைக் கொடியாக உடையவன் என்பது 'கருடகேதனன்' என்னும் சொல்லால் தெரிகிறது. இவன் பாண்டியர்களை வென்று மதுரையை பிடித்துள்ளான் என்பதை 'மதுராபுரி மகாநாயகன்' என்பதாலும், 'பாண்டிய குலாந்தகன்' என்பதாலும் அறியலாம். ஆதலின் 'சமரகோலாகலன்' 'புவனேகவீரன்' என்னும் காசுகள் இவனது கொடியான கருடனை இலச்சினையாகக் கொண்டுள்ளன என்பது தெளிவு. இவன் அழகர் கோயில் உகந்தருளும் பெருமாளான திருமாலிருஞ்சோலை நின்றாரிடம் அளவிலாப் பக்தி பூண்டவன். இவனது இரு கல்வெட்டுக்களும்

'அழகர் திருவுள்ளம்' என்று தொடங்குகின்றன. இவனது பெயரே திருமாலிருஞ்சோலை நின்முன் என்பதாகும். இவன் தனது மகனுக்கும் 'திருமாலிருஞ்சோலை நின்முன்' என்று பெயர் கொடுத்திருக்கிமுன் என்று நெக்கோணம் கல்வெட்டிலிருந்து அறிகிறோம்.

இவனது பட்டங்களில் அரச குலங்களான சர்பங்களுக்கு (பாம்புகளுக்கு) கருடன் என 'ராஜகுல சர்ப கருடன்' என்று ஒரு பட்டம் காணப்படுகிறது. இவனது வீரத்தின் உருவகமாக இப்பட்டம் அமைகிறது. இதையே தனது காசிலும் பொறித்து இவன் மகிழ்ந்துள்ளான். கருடன் தனது கரத்தில் ஒரு பாம்பை பிடித்துள்ளதுபோல் காணப்படுவது மாற்று அரசர்களை இவன் வெற்றிகண்டதைக் குறிக்கும் பிரதிபிம்பமாக அமைகிறது.

இவன் கருடக் கொடிக்கு கொடுத்துள்ள சிறப்பை ஒரு பாடல் கல்வெட்டு அழகாகக் கூறுகிறது.[13] சோழனது புலிக்கொடியையும், பாண்டியனது மீன் கொடியையும், சேரனது வில் கொடியையும் காட்டிலும் திருமாலிருஞ்சோலை நின்முன் மாவலிவாணதராஜன் கொடியே கொடி என அக்கல்வெட்டுப் பாடல் கூறுகிறது.

சென்னிப் புலிக்கொடியும் தென்னன் கயல் கொடியும்
மின்னும் கழல் பிறையோன் விற்கொடியும்-மன்னும்
வருசைக் கொடைத் திருமால் மாவலிவாணன் தன்
கருடக் கொடியே கொடியாம் காண்.

இக்கல்வெட்டு குளத்தூர் தாலுகா குடுமியாமலையில் உள்ளது. அதே இடத்தில் இவனது பல கல்வெட்டுகள் பாடல் வடிவில் காணப்படுகின்றன. இவற்றிலிருந்து இவன் புலமையைப் போற்றியவன் என்பதும் தெளிவாகும். இப்பெருமகன் வெளியிட்ட காசுகளே 'புவனேகவீரன்' 'சமர கோலாகலன்' என்னும் பெயர் பொறித்த காசுகள் என்பதில் ஐயமில்லை.

---

1. Elliot-Coins of Southern India.
2. T. Desikachari – Dravidian coins. pp. 16-17
3. T. Desikachari–plate IV. Fig. 74
4. Natanakasinathan Coins of Samarakolahala and Bhuvanekavira K. A. N. Sastri Felicitation volume Fig. 2.
5. Ibid-Fig. 75
6. Ibid-Fig. 79
7. Ibid-Fig. 80
8. Ibid-Fig. 76
9. இரா. நாகசாமி கையேடு பக்கம் 194
10. நடன. காசிநாதன் K. A. Nilakanta Sastri Felicitation volume pages 321-324
11. புதுக்கோட்டைக் கல்வெட்டுகள் எண் 671
12. ,, ,, 672
13. ,, ,, 674



அறுமுகப்பெருமான்—மரச்சிற்பம்; சென்னைப் பொருட்காட்சிச் சாலை

# தமிழ்நாடு அரசு
# கீழ்த்திசை ஓலைச்சுவடி நூலகம்

## வரலாற்றுச் சுருக்கம்

பேராசிரியர் சம்பத்

சென்னையிலிருந்த கிழக்கிந்தியக் கம்பெனிப் படையைச் சார்ந்த கர்னல் மெக்கன்சி அவர்களின் தனிப்பட்ட சேகரிப்பே இந்நூலகத்தின் அமைப்பிற்கு அடிப்படை எனலாம். கி.பி. 1782 முதல் 1818 வரை சென்னையில் இருந்த அவர், தென்னிந்தியாவின் இலக்கியச் செல்வம், சமயம், பழக்க வழக்கங்கள் ஆகிய வற்றைக் காட்டும் பல ஓலைச் சுவடிகள் காசுகள், கல்வெட்டுக்கள், தேசப் படங்கள், வரை படங்கள் ஆகியவற்றைச் சேகரித்தார். பின்னர் இந்தியா முழுமைக்கும் அளவையதிகாரியாக (Surveyor General) நியமனம் பெற்று கல்கத்தா சென்ற பின்பும் கூட, இம்மதிப்பு மிக்க பொருட்களைத் தொகுப்பதி லேயே வாணாள் முழுவதும் செலவு செய்தவர். அவர் கி.பி. 1821-இல் விண்ணுல கடைந்தார்.

பின் கவர்னர் ஜெனரலாக வந்த வாரன் ஹேஸ்டிங்ஸ், இம்மதிப்பு வாய்ந்த தொகுப்பினை அவரது மனைவியிடம் இருந்து பெற்றார். அன்று அவை 14 மொழி களில் 16 வகை எழுத்துக்களில் இருந்தன. அக் குறிப்புகளிலே ஒரு பகுதி இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டது. அவை இப்பொழுது இந்திய அலுவலக நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. மற்றொரு பகுதி கல்கத்தாவில் உள்ளது. தென்னிந்தியாவைச் சார்ந்த எல்லா வகையான பழமையான பொருள்களும் நூல்களும் 1828-ஆம் ஆண்டு வரை சென்னைக் கல்லூரி நூலகத்திலேயே வைக்கப் பெற்றிருந்தன. அவைகள் அனைத்தையும் 1830இல் சென்னை நூலகக் குழு தனது பொறுப்பில் எடுத்துக்கொண்டது.

சென்னை அரசு அலுவலராக இருந்த சி. பி. பிரௌன் என்பார் தமிழ், தெலுங்கு, கன்னட மொழிகளில் எழுதப்பட்ட சில கையெழுத்துப் பிரதிகள் இந்திய அலுவலக நூலகத்தில் இருப்பதை 1837இல் கண்டுணர்ந்தார். அவை அனைத்தும் 1803 முதல் 1811 வரை இந்தியாவில் வாழ்ந்து வந்த டாக்டர் லேய்டல் என்பாரைச் சார்ந்ததாகும். அந்தப் பிரதிகள் அனைத்தையும் பின்னர் கிழக்கிந்தியக் கம்பெனியார் வாங்கி 'இந்திய வீட்டில்' பாதுகாப்பாக வைத்தனர். 1844இல் அவை அனைத்தும் சென்னை நூலகக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டன. பின்னர் 1847-இல் சென்னையில் உள்ள கல்லூரி நூலகத்துக்கு மாற்றப்பட்டன. அதே போன்று மெக்கன்சியால் சேகரிக்கப் பெற்ற பொருள்கள் அனைத்தும் கல்லூரி நூலகத்துக்கு மாற்றப்பட்டன.

சி. பி. பிரௌன் என்பார் தன்னுடைய தனிப்பட்ட முயற்சியினால் சேகரித்து வைத்திருந்த எல்லாப் பொருள்களையும் அன்பளிப்பாக அளித்து விட்டார். அவைகளுள் ஒன்று, "வேமன சதகம்" என்னும் நூலுக்குத் தானே தன் கையால் எழுதிய ஆங்கில மொழிபெயர்ப்பாகும். மற்றவை பெரும்பாலும் தெலுங்கு

கையெழுத்துப் பிரதிகள். அவைகள் தெலுங்குக் கையெழுத்துப் பிரதிகளாக இருந்தாலும் பாதி நூல்கள் வடமொழி நூல்களாகும். அவர் கி.பி. 1855-இல் தனது தாய் நாடு திரும்பும் வரை சிறிது சிறிதாகச் சேகரித்துத் தந்து கொண்டே இருந்தார்.

சில ஆண்டுகளுக்குப் பின்னர் அப்பொருள்கள் அனைத்தும் பொதுமக்கள் தொடர்பு இயக்குநர் அவர்களின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டன. அவர் பழமையான கோப்புக்களை எவ்வாறு வைத்திருந்தார்களோ, அது போன்று ஒரு கிடங்கில் வைத்து ஒரு சிற்றெழுத்தரை நியமித்து அவற்றைக் கண்காணித்து வரச் செய்தார்.

கையிருப்புப் பொருள்களைச் சோதனை செய்யும் புலனாய்வுப் பிரிவினர் அக் கிடங்கைப் பார்வையிட்ட போது, கையெழுத்துப் பிரதிகளின் மோசமான நிலையைக் கண்டுணர்ந்து அதனை அரசுக்கு விண்ணப்பித்தனர். அப்பொழுது மாநிலக் கல்லூரி வடமொழிப் பிரிவின் பேராசிரியராக இருந்த திரு. பாக்போர்டு என்பவரின் பெரு முயற்சியால் அரசு ஒரு தனிக்குழுவை அமைத்தது. அதன் வேண்டுகோள் மூலம் அப்பிரதிகளை நல்ல முறையில் பாதுகாக்கும் பொறுப்பையும் அவைகளைத் திரும்பவும் நல்ல முறையில் படி எடுக்கும் பொறுப்பையும், மாநிலக் கல்லூரி வடமொழிப் பிரிவுப் பேராசிரியரிடமே ஒப்படைத்தனர். 1870-இல் எல்லாப் பிரதிகளும் மாநிலக் கல்லூரிக்குக் கொண்டு வரப்பட்டன. பின்னர் திரும்பவும் 1895-இல் எல்லாப் பொருள்களும் சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள ஒரு அறைக்கு எடுத்துச் செல்லப்பட்டன. 1896-இல் அவை அனைத்தும் சென்னைப் பொருட்காட்சி சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

இரண்டாம் உலகப் போரினால் மக்கள் இடம் பெயர்ந்தபோது இக் கையெழுத்துப் பிரதிகளும் 1942-இல் திருப்பதிக்கு எடுத்துச் செல்லப்பட்டு வெங்கடேஸ்வரர் கீழ்த்திசைக் கழகப் பணிமனையில் பாதுகாப்பாக வைக்கப் பெற்றன. திரும்பவும் 1945-இல் சென்னைக்கு எடுத்து வரப்பட்டு அவை இன்று பல்கலைக்கழக நூலகக் கட்டடத்தின் முதல் மாடியில் மேற்குப் பக்கத்தில் வைத்து பாதுகாக்கப் பட்டு வருகின்றன.

திறன் மிக்க காப்பாளர்களின் முயற்சியாலும், துறைப் பண்டிதர்களது உழைப்பாலும், ஒவ்வொரு ஆண்டும் சேகரிப்புகள் அதிகமாகின. 1872-இலிருந்து 1930 வரை தலைவர் ஒருவர், பண்டிதர், எழுத்தர், கடைநிலை ஊழியர் ஆகியோர் அடங்கிய குழு ஏராளமான பிரதிகளைச் சேகரித்தது.

மொழி வழி மாநிலங்களாகப் பிரிந்த பின்னர் மொழி வாரியாகப் பிரதிகள் அந்தந்த மாநிலத்துக்கு அனுப்பப்பட்டன. 1959-இல் 1224 கட்டுக்களைக் கொண்ட கன்னட மொழிப் பிரதிகள் கர்நாடக மாநிலத்துக்கும், 1960-இல் 3335 கட்டுக்களைக் கொண்ட தெலுங்கு மொழிப் பிரதிகள் ஆந்திர மாநிலத்துக்கும், 1961-இல் 533 கட்டுக்களைக் கொண்ட மலையாள மொழிப் பிரதிகள் கேரள மாநிலத்துக்கும் அனுப்பப்பெற்றன.

தற்பொழுது இந்நூலகத்தில் உள்ள சேகரிப்புகளில் தோராயப் பட்டியல்;

| | கையெழுத்துப் பிரதிகள். | அச்சான நூல்கள். |
|---|---|---|
| வடமொழி ... ... ... ... | 44,570 | 6,463 |
| தமிழ் ... ... ... ... | 12,140 | 3,569 |
| தெலுங்கு ... ... ... ... | 2,180 | 1,369 |
| கனனடம் ... ... ... ... | 247 | 702 |

| | | | |
|---|---|---|---|
| மராத்தி | ... ... ... ... | 486 | 132 |
| இசுலாமிய மொழிகள் | ... ... | 1,955 | 919 |
| பலமொழிகளில் | ... ... ... | 434 | — |
| மலையாளம் | ... ... ... | — | 435 |
| ஆங்கிலம் | ... ... ... | — | 5,283 |
| | | 62,012 | 18,872 |

இங்குள்ள சேகரிப்புகளை இந்நூலகம் மூன்று வகைகளில் வெளியிடுகிறது.

1. பல மொழிகளில் உள்ளவைகளைத் தாங்கி ஆண்டுக்கு இருமுறை வரும் இதழ் மூலம் ஒவ்வொரு தொகுதியிலும் இரு பிரிவுகளையுடைய 18 தொகுதிகள் இது வரையில் வெளிக் கொணரப்பட்டுள்ளன. ஒவ்வொரு தொகுதியிலும் பலமொழி களில் உள்ள கிடைத்தற்கரிய நூல்கள் அச்சிடப்பெறும்.

2. வெளியீடுகள்:

(அ) சென்னை அரசு கீழ்த்திசை வெளியீடு.

(ஆ) சென்னை அரசு கீழ்த்திசைப் பிரதிகள் வெளியீடு.

இந்த வெளியீடுகள் அனைத்தும், காப்பாளர்கள், அவரது மற்ற அலுவலகர்கள் ஆகியோர்களாலோ அல்லது அந்தத் துறையில் கற்றுத் தேர்ந்த வல்லுநர்களாலோ வெளியிடப் பெறுகின்றன.

தமிழாக்கம் - நடன. காசிநாதன்

---

# மகன் முகம் நோக்கி...

மகன் பிறந்தவுடன் தந்தை மகவின் முகம் காணல் ஒரு சிறந்த மரபு. தொல் காப்பியம், கற்பியல், 5-ஆம் சூத்திரத்துக்கு உரை எழுதும் நச்சினர்க்கினியர், 'சிறப் பாவது புதல்வன் முகங்காண்டல்' எனக் குறிக்கிருர். அதியமான் நெடுமானஞ்சி மாற் றரசர்களோடு போரிட்டு வெற்றிகண்டான். அப்போர்ச்சினம் தணியவில்லை, சிவந்த கண்ணுடனே திரும்பினன், தனக்குப்பிறந்துள்ள மகவின் முகம் காண. இன்புற்று மகிழவேண்டிய மகவின் முகம் காணும்போதுகூட அவன் கண்ணின் சிவப்புத் தணிய வில்லையெனில் அவன் வெகுண்ட மாற்றரசர்களின் நிலை என்னே என ஔவை பாடு கிருள் (புறம் 100). பிறந்த மகவின் மூகம் காணல் என்ற வழக்கம் சங்க காலத்தி லேயே இருந்தது என்பதற்கு இது சான்று.

இதுபோன்று முகம் காணும் நிகழ்ச்சியை ஒரு கல்வெட்டும் கூறுகிறது. புதுக் கோட்டை மாவட்டம் திருமெய்யம் தாலுக்கா நெக்கோணத்தில் இக்கல்வெட்டு உள்ளது. புதுக்கோட்டைக் கல்வெட்டுக்கள் தொகுதியில் எண் 672 ஆக இது பதிப் பிக்கப்பட்டுள்ளது.

சுந்தரத்தோளுடையான் மாவலிவாணதிராஜன் என்பவன் இப்பகுதியைச் சக வருடம் 1405 (கி. பி. 1483)இல் ஆண்டான். அவனுக்கு ஒரு மகன் பிறந்தான். அம் மகனின் முகம் கண்டு அதன் நினைவாக நிலம் தானம் அளித்திருக்கிருன். அத் தானத்தை குறிக்கும் கல்வெட்டு இது. கல்வெட்டின் வாசகப்பகுதி கீழ்வருமாறு உள் ளது. 'பூசத்து நாள் நாமகரணஞ்சாத்தின நம்முடைய புத்ரன் ஆன நாயினர் திரு மாலிருஞ்சோலை நின்ருந் ஜனன காலத்தில் முந்நாள் புத்ரமுகதர்சனம் பண்ணிய காலத்தில் உதகம் செய்து(நீர் வார்த்து) கொடுத்த தர்ம சாஸன பட்டயம்''.



பாரிஸ் மாநகர மீயூசிகிம்மே என்னும் காட்சிசாலையில் உள்ள
ஆடவல்லான் திருமேனி கி. பி. 11-ஆம் நூற்றுண்டு.



சோழ மாதேவியின் செப்புத் திருமேனி; இராஜேந்திர சோழன் காலம்;
கி. பி. 11-ஆம் நூற்றாண்டு

# சிவந்தெழுந்த பல்லவராயன் உலா

இரா. நாகசாமி

## அறிமுகம்

தமிழ்த் தாத்தா உ. வெ. சாமிநாதய்யர் அவர்கள் சேகரித்த தமிழ்ச் செல்வங்களில் 'சிவந்தெழுந்த பல்லவராயன் உலா' என்னும் ஒரு சுவடி உள்ளது. இந்நூலைப்பற்றி உ. வெ. சாமிநாதய்யர் நூலக விளக்கக் குறிப்பு கீழ் வருமாறு குறிக்கிறது.

'இது மல்லைச் சிவந்தெழுந்த பல்லவன் என்று ஒரு அரசன் மீது பாடப்பெற்ற உலாவாகும். ஆசிரியர் பெயர் முதலியன தெரியவில்லை. இந்தப் பிரதியின் நூல் பூர்த்தியாகவுள்ளது'

என்று கூறுகிறது. இவ்வுலாவை இயற்றியவர் 'மல்லைச் சிற்றம்பலக் கவிராயர்' என்று கல்வெட்டு இதழ் இரண்டில் குறித்துள்ளேன். இப் பல்லவனைப் பற்றி தெளிவான செய்திகள் இப்பொழுது கிடைத்துள்ளன.

## சிவந்தெழுந்தானின் முன்னோர்கள்

இவ்வுலாவின் பாட்டுடைத் தலைவன் சிவந்தெழுந்த பல்லவராயன் என்பவன்.

இவன் பல்லவர் வழி வந்தவன் என்று கூறிக் கொள்கிறான். சோழர், பாண்டியர் ஆகிய இரண்டு குடிகளுடனும் தொடர்பு உடையவன். இவனது முன்னோர்களில் புராணங்களில் இடம் பெற்றவர்களும் குறிக்கப் படுகின்றனர். தமயந்தியின் சுயம்வரத்தில் கல்யாணப் பந்தலில் இவனது முன்னோன் ஒருவன் நளனோடு வந்து நின்றானும். மற்றொருவன் பல்லவதேசத்துக்கு சீவகன் வந்த போது விருந்தளித்தானும்.

புராணத்தலைவர்களைக் காட்டிலும் வரலாற்றுத் தொடர்புடைய முன்னோர்களே இந்நூலில் அதிகம் இடம் பெற்றுள்ளனர். தில்லையில் ஒருவன் பல்லவனீச்சரம் தோற்றுவித்தான். காவிரிப்பூம்பட்டினத்தில் பல்லவனீச்சரம் தோற்றுவித்தான் மற்றொருவன் (17). காடவர்கோனும், திருத்தொண்டத் தொகையில் இடம் பெற்ற கழற்சிங்கனும் இவனது முன்னோர்களே (19). பாடலிபுரத்தில் அமரர் கோட்டம் களைந்த மகேந்திரனும் இவன் வழி முன்னோனே(20). கலிங்கத்துப் பரணியில் புகழ் பெற்ற கருணாகரத்தொண்டைமானும், ஒட்டக்கூத்தனால் பரணியில் பாடப் பெற்ற திருச்சிற்றம்பலமுடையான் பெருமானம்பி பல்லவராயனும் இவனது முன்னோர்கள் என்பதில் பெருமை கொள்கிறான்.

செழியர் குலத்துக்கு வந்த கேட்டினைக் களைந்து கேரளசிங்க வள நாட்டைக் காத்த நராதிபன் என ஒருவன் குறிக்கப்படுகிறான். கேரள சிங்க வளநாடு என்பது புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒரு பகுதி. பாண்டியருக்குச் செய்த உதவிக்காகப் பல்லவராயர் குடிக்கு இப்பகுதி அளிக்கப்பட்டது போலும்! இது வரலாற்று நிகழ்ச்சியைக் குறிக்கிறது என்பதில் ஐயமில்லை. ராயர் பெயர் கொண்ட ஒருவன் என ஒரு முன்னோனைக் குறிக்கிறது உலா. பல்லவரையர் எனச் சோழர் காலத்தில் குறிக்கப்பட்ட இவர்கள் பல்லவராயர் எனக் கூறிக் கொள்ளத் தலைப் பட்டதை இது குறிக்கிறது போலும்! வாரைப்பதி, அழும்பில், சூரைக் குடி ஆகிய ஊர்களை ஒரு பல்லவன் வெற்றி கண்டிருக்கிறான். இவன் முன்னோன் ஒருவன் அவிநயத்திற்கு உரை எழுதியவன். (575-576)

இவை தவிர சில முன்னோர்களின் பட்டப்பெயர்கள் சிறப்பாகக் குறிக்கப்படுகின்றன.

அடைக்கலங்காத்தான் பட்டமானங்காத்தான்
வழுதி மானங்காத்தான் பதினெட்டு வன்னியர் கண்டன்

போன்றவை இவ்வாறு குறிக்கப்படுகின்றன. இதே பட்டங்கள் திருவரங் குளம் கல்வெட்டில் சிவந்தெழுந்தானை திருமலைராயப் பல்லவராயன் என்பவனுக்குக் காணப்படுகிறது (புதுக்கோட்டைக் கல்வெட்டு 752). கல் வெட்டில் காணப்படும் சில சிறந்த பெயர்கள் இவ்வுலாவிலும் வருவதி லிருந்து இவ்வுலாப் பாடிய புலவரின் வரலாற்றறிவு தெளிவாகிறது.

இவ்வுலாவிலிருந்து இவன் பெரிய பெருமாள் என்பவனின் மகன் என்று தெரிகிறது.

பேராளன் எங்கள் பெரியபெருமாள் மதலை
பாராள் சிவந்தெழுந்த பல்லவர்கோன் — 594

பிள்ளைப் பெருமாள் பெரியபெருமாள் தந்த
வள்ளற் பெருமாள் — 523

சிரம்பெற்ற செங்கைச் சிகைநாதர் தாளில்
வரம்பெற்றுப் பெற்ற மதலை — 75

இவன் தாய் மல்லப்ப பல்லவராயனின் மகள் என்றும் மல்லப்பன் அச்சுதப்பல்லவராயனின் மகன் என்றும் பாடல் குறிக்கிறது.

ஞான மருவுதுரை அச்சுதன்சேய் மல்லப்பன் பாவை
திருவுதரம் வாய்த்த சிறுவன் — 71

இவன் தாயுடன் பிறந்தவர்கள் திருமலைநாதன், சோழன் என்று பெயர் பெற்ற இருவர்.

மல்லப்பன் மெச்சு திருமலை நாதனுக்கும் சோழனுக்கும்
தன்மருகன் — 72

தருமான சோமன் குலத்துதித்தவன். தன் மாமனுன சோழன் பெயர் கொண்டவன். குடுமியாமலையில் உரைகின்ற சிகாநாதசுவாமியின் தாள் சூடுபவன். கொல்லிமலை, குடுமியாமலை, பொதியமலை ஆகியவற்றின் தலைவன். சோணுடு, பெருவாசல்நாடு, பைங்காட்டுநாடு, கபிலைநாடு குள மங்கலநாடு, கோனுடு ஆகியவற்றின் தலைவன். சேமன் என்னும் விருதுப் பெயர் தாங்கியவன். சங்கமும் வெண்பிறையும் தாங்கியவன். தென்னவன் வரராமன், வீரநரசிங்கன் என்று பெயர் பூண்டவன். வழுதிமானங் காத்தான், பட்டர் மானங்காத்தான் என்று பட்டம் பூண்டவன். வழுதி நாடு, ஆலங்குடிநாடு, அமராபதிநாடு, கடுவாய்க்குடிநாடு, செங்காட்டுநாடு, திருப்பேரையூர்நாடு, வல்லநாடு, திருமெய்யமலைநாடு, சந்திரேகைநாடு, கொடுங்குன்றநாடு, திருக்கோளக்குடிநாடு, கோனுடு ஆகிய நாடுகளை ஆளப் பிறந்தவன். நற்குணங்களும், நாகரிகமும் படைத்தவன். வேளாண்மை கீர்த்தி, விவேகம், பெருஞ்செல்வம், தாளாண்மை இத்தனையும் பெற்றவன் எனப் புகழப்படுபவன். இங்கு குறிக்கப்பட்ட நாடுகள் அனைத்தும் புதுக்கோட்டைப் பகுதியில் இருந்தவை.

இவனது கொடி புலிக்கொடி (99). கல்விக்கடலைக் கரை கண்டவன். இவன் மீது மடல், உலா, மாலை, தொடை, சந்தம், பரணி, கோவை, ஆகிய 96 வகைப் பிரபந்தங்கள் எழுதப்பட்டன. எனவே நயம் சிறக்க (102) 'தொண்ணூற்ருறு கோலப்பிரபந்தங்கள் கொண்ட பிரான்' என்று பட்டம் கொண்டான். இவன் மீது கோவை, பிள்ளைத்தமிழ், பரணி, வஞ்சி, வெண்கலி, வள்ளைப்பாட்டு, கலம்பகம், பொன்னூசல், மறம், குறம் ஆகிய பாடல்கள் இயற்றப்பட்டன. (583-585). இவன் மீது பாடப்பட்ட பிள்ளைத்தமிழ் கிடைத்துள்ளது.

சிறந்த சிவபக்தன், குடுமியாமலைநாதன், கோகருணைநாதர், பேரையூர் வேதர், நிம்பவன மெய்யர், காஞ்சிநாதர் ஆகிய தெய்வங் களிடம் பக்தி பூண்டவன் என்பவை இவனைப் பற்றி இவ்வுலாக் குறிக்கும் செய்திகள்.

........................மலைக்குடுமி
நாதர்க்கும் கோக்கருணை நம்பர்க்கும் பேரையூர்
வேதர்க்கும் நிம்பவன மெய்யர்க்கும்-சூதத்
திருகாஞ்சி நம்பர்க்கும் செய்த படியே
பெருங்காஞ்சி சிறப்பருளப் பெற்ருேன் — 108

இவனுலோ அல்லது இவன் முன்னேராலோ செய்யப்பட்ட திருப்பணிகளும் உலாவில் குறிக்கப்பட்டுள்ளன. ஆயிரக்கால் மண்டபம், கோபுரம், மதில், தேர், கோகர்ணக்கடவுளுக்குப் பொற்கிரீடம், பாரசங்கிலி மண்டபம் ஆகியன செய்யப்பட்டன.

பின்னுமொரு மாடம் பெயர்த்தேறிக் குன்றுசர
மன்னுமணி யாயிரக்கால் மண்டபமும்-துன்னும் — 586
கொடிக் கோபுரமும் கொடி மதிலும் தேரும்
கடிக்கோ மறுகு மலர்க் காவும் படிக்கோ — 587

கருணை மலையாளர் கனசிகரக் கோட்டு
கிரணமதுட் செம்பொற் கிரீடத்-தருணமணி — 588
தன்பரவு திண்பார சங்கிலி மண்டபமும் — 589
. . . . . . . .
. . சிவந்தெழுந்தான் பல்லவர் கோன்-காராளன் — 594
சித்தமுறைச் செய்த திருப்பணியே யாதியாய்
யெத்தனையும் வெவ்வேறெடுத் துரைத்தாள் — 595

## புதுக்கோட்டை வரலாற்றில் பல்லவராயர்கள்

புதுக்கோட்டை மாவட்டத்தில் கோகர்ணம், குடுமியாமலை, திருவரங்குளம் முதலிய ஊர்களில் இப்பல்லவராயர்களைப் பற்றிய கல்வெட்டுகள் உள்ளன. விஜயநகர காலத்தில் இவர்கள் நிலை மிகவும் உயர்ந்து காணப்படுகிறது. (பிறை அடைப்புக்குள் உள்ள எண்கள் புதுக் கோட்டைக் கல்வெட்டுக்கள் என்னும் நூலில் குறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு எண்கள்).

குன்னண்டார் கோயிலில் உள்ள சடாவர்மன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டில் சேரநாராயணப் பல்லவராயன் என்பவன் குறிக்கப்படுகிறான். (353). அதே அரசனின் காலத்தில் ஆதனூர்க் கல்வெட்டில் சங்கர நாயனான பல்லவராயன் என்பான் காங்கேயன் என்பவனுக்கு அதிகாரியாகக் குறிக்கப்படுகிறான் (354-355). நெய்வாசல் கல்வெட்டிலும் இவன் குறிக்கப்படுகிறான் (424). ஒலியமங்கலத்தில் உள்ள குலசேகரபாண்டியனின் கல்வெட்டில் பேராம்பூர்கேத்தன் சேமனான ஆய்ப்பாடி பல்லவராயன் என்பவன் குறிக்கப்படுகிறான் (587). திருக்கட்டளைக் கல்வெட்டு தேவராயர் மகன் மல்லிகார்ச்சுனன் ஆட்சியில் சகம் 1384 [1462 கி.பி.]-இல் சிரங்கன் பல்லவராயன் என்பவன் தென்பனேங்காட்டு நாட்டு பெருங்கோளி ஊர் அரசாகக் குறிக்கப்படுகிறான் (711). புதுக்கோட்டைப் பொது அலுவலத்திற்கு அருகில் உள்ள மதிற்சுவரில் (713) மல்லிகார்ஜுனன் மகன் தேவராயன் கல்வெட்டில், சகவருடம் 1397ல் (1475 கி. பி.) பெருங்கோளி ஊர் அரசு விழித்துறங்கும் பெருமாள் பல்லவராயர் கையில் இருந்தது. இதே பல்லவராயர் திருக்கட்டளைக் கல்வெட்டிலும் (714) குறிக்கப்படுகிறார். குடுமியாமலையில் உள்ள பிரதாபதேவராயர் கல்வெட்டு சகம் 1432ல் உள்ளது. இதில் வழுத்தூர் அரசு தீராவினை தீர்த்தாரான வீரநரசிங்க ராய நாயக்கப் பல்லவராயன் குறிக்கப்படுகிறான் (726). இவன் கிருஷ்ண தேவராயனின் காலத்தவன். இவனுக்கு அதிகாரியாகக் கவிகுஞ்சரம் மண்டலம்முடையான் என்பவன் இருந்தான். அச்சுதராயர் காலத்தில் [சகம்1452 1530 கி.பி.] விரையாச்சிலை என்னும் படைப்பற்றுக்குத் தலைவனாகச் சொக்கனார் பல்லவராயன் குறிக்கப்படுகிறான். (745) இவனது மகன் குளத்திப் பல்லவராயன், மாணிக்கம், அவன் மகன் மணவாளன் ஆகியோர் குறிக்கப்படுகின்றனர்.

ஆலங்குடி வட்டம் திருவரங்குளம் கோயிலில் ஒரு முக்கியமான கல்வெட்டு உள்ளது. சகம் 1461 (1539 கி.பி.)-இல் அச்சுதராயர் கல்வெட்டு

அது. அதில் சிவந்தெழுந்தான் திருமலராசபல்லவராயன் என்பவன் வழுத்தூர் அரசனுகக் குறிக்கப்படுகிறுன். (752), அவன் கோயிலில் 'பல்லவ ராயன் சந்தி' என ஒரு வழிபாடு ஏற்படுத்தி அதற்குக் கொடுத்த தானத்தை அக்கல்வெட்டு கூறுகிறது. அதில் அவனது பல பட்டப்பெயர்கள் குறிக்கப் படுகின்றன. அப்பட்டங்கள் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| அடைக்கலங்காத்தான் | அரசராட்டம் தவுத்தான் | இளவரசர் மணவாளன் |
| பலவரசர் மணவாளன் | பாண்டியன் முடிகாத்தான் | பட்டமானங்காத்தான் |
| சாளுவமானங்காத்தான் | பகைமதியாதான் | பாரசங்கிலி இட்டான் |
| பூவைகுமாரர் மணவாளன் | வங்கநாராயணன் | பெண்ணுக்குமார மணவாளன் |
| | பதினெட்டு வண்ணியர் கண்டன் | |

என்பவையாகும். இவன் கோனேரிராசப் பல்லவராயன் என்பவனின் மகன் என்று கல்வெட்டுக் கூறுகிறது. பல்லவராயர் வழியில் சிவந்தெழுந்தான் பல்லவராயன் என்று முதன் முதலில் பெயர் பெற்றவன் இவன் போலும்!

குளத்தூர் வட்டம் தென்னங்குடிக் கல்வெட்டில் சகம் 1511-இல் 'அச்சதப் பல்லவராயன்' குறிக்கப்படுகிறுன் (860). இவன் விஜயநகர மன்னன் அச்சுதராயனின் பெயர் கொண்டவன். புல்வயலில் உள்ள கல் வெட்டு 1529-இல் வழுத்தூர் அரசு ஆவுடையநாயனுர் பல்லவராயன் குறிக்கப்படுகிறுன் (864). குடுமியாமலேயில் உள்ள சகம் 1537-ஆம் ஆண்டுக் கல்வெட்டு வழுத்தூர் சீர்மை 'அச்சுதப் பல்லவராயர் குமாரர் மல்லப்பப் பல்லவராயர்' கையில் இருந்தது என்று காட்டுகிறது.

பாட்டுடைத்தலேவன் வழி :

மேலே குறிக்கப்பட்ட கல்வெட்டுச் செய்திகளிலிருந்து இப்பல்லவ ராயர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் பெருங்கோளி ஊர், விரையாச் சிலே, பேராம்பூர், வழுத்தூர் ஆகிய அரசு தலேவர்களாக இருந்திருக்கிறுர் கள் என்று அறிகிறேம். இவர்கள் அண்ணன் தம்பி உறவினர்களாகவும், பெண் கொண்ட உறவினர்களாகவும் இருந்திருக்கிறுர்கள். உலாவின் பாட்டுடைத் தலேவன் சிவந்தெழுந்த பல்லவராயன் எந்த அரசு தலேவன் என்று தெளிவாகத் தெரியவில்லே. கூடலர்கோன் என்று குறிக்கப்படு வதால் கூடல் என்னும் ஊர்த் தலேவன் எனலாம். மல்லேச் சிவந்தெழுந்த பல்லவராயன் எனக் குறிப்பதால் மல்லேயூரைச் சார்ந்தவன் என்றும் தெரி கிறது. இவனது பெயர் சேமன் என்று குறிக்கப்பட்டுள்ளது என்று கூறினேம். குலசேகரபாண்டியனின் காலத்தில் பேராம்பூர் தலேவன் சேமனுன ஆய்ப்பாடிப் பல்லவராயன் குறிக்கப்பட்டுள்ளான் என்று முன் னரே கண்டோம். பாட்டுடைத் தலேவன் தந்தை வழியில் இச்சேமன் வழி யில் வந்திருக்கக் கூடும். பெரியபெருமாள் என்று பெயர் பெற்ற இவனது தந்தை திருக்கோகர்ணத்துப் பிரானே வேண்டி பிறந்த பிள்ளே இவன் எனவும் அறிகிறேம்.

தாய்வழி அதிகச் செல்வாக்குப் பெற்றது போலும்! பாடலில் அது மிகவும் சிறப்பாகக் குறிக்கப்பட்டுள்ளது. அச்சுதப் பல்லவராயன் மகன் மல்லப்ப பல்லவராயனின் மகள் வயிற்று பிள்ளே இவன் என்று முன்னர்

கண்டோம். இவ்வச்சுதப் பல்லவராயரும், மல்லப்பப் பல்லவராயரும் கல்வெட்டில் குறிக்கப்படுகின்றனர். அச்சுதப்பல்லவராயர் சகம் 1511-இல் தென்னங்குடிக் கல்வெட்டில் குறிக்கப்படுகிருர். இவர் தந்தை பெயர் குறிக்கப்படவில்லை. குடுமியாமலைக் கல்வெட்டு (சகம் 1537), 'அச்சுதப் பல்லவராயர் மகன் மல்லப்ப பல்லவராயர்' என்பவரைக் குறிக்கிறது. உலாவும் அச்சுதப் பல்லவராயரின் மகன் மல்லப்ப பல்லவராயர் என்று குறிக்கிறது. ஆதலின் இவர்கள் இருவருமே கல்வெட்டில் குறிக்கப் பட்டவர்கள் தாம் என்பது திண்ணம். இவர்கள் 16-ஆம் நூற்றுண்டின் இறுதியிலும் 17-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்திலும் இருந்தவர்கள் ஆதலின் உலாவின் பாட்டுடைத் தலைவன் 17-ஆம் நூற்றுண்டின் இடையில் வாழ்ந்தவன் என்பது தெளிவு.

**காலம்**

'சிவந்தெழுந்த பல்லவராயன் உலாப்' பாடிய புலவர் மல்லையூர் சிற்றம்பலக் கவிராயர் என்று உ. வெ. சாமிநாதய்யர் அவர்கள் குறித்து ள்ளார்கள். சிற்றம்பலக் கவிராயர் மருங்காபுரி வீரபூச்சைய நாயக்கர் மீது பிள்ளைத் தமிழ் பாடினர். அதற்கு இரண்டு ஊர்கள் தானமாகப் பெற்றுர். தானம் கொடுத்த ஆண்டு சகம் 1569 (1647 கி. பி.) என்று ஓலைப்பட்டயம் கூறுகிறது. இவ்வாண்டு சிவந்தெழுந்த பல்லவராயன் வாழ்ந்த காலத்துக்கு ஒத்துவருவதும் குறிப்பிடத்தக்கது. விசயரகுநாத சேதுபதி, சேலம் கட்டிமுதலி, வீரதிருவேங்கடநாதன், மருங்காபுரி வீர பூச்சைய நாயக்கர் ஆகியோர் மீது சிற்றம்பலக் கவிராயர் பாடல்கள் பாடியுள்ளார். இவர்கள் அனைவரது சம காலத்தவன்தான் உலாவின் பாட்டுடைத்தலைவன் சிவந்தெழுந்த பல்லவராயன். மதுரைத் திருமலை நாயக்கர் காலத்தில் வாழ்ந்தவன்.

சிவந்தெழுந்த பல்லவராயன் உலாவில் இப்பல்லவராயர் வழியைப் பற்றிய பல சிறந்த வரலாற்று செய்திகள் உள்ளன. ஆதலின் அவற்றை ஆய்வது இவ்வழியை ஆயப்பெரிதும் உதவும். இந்நூல் அச்சாகவில்லை.

இவன் மீது ஒரு பிள்ளைத் தமிழும் உண்டு. அது குறைப் பிரதி யாகக் கிடைத்துள்ளது. உ. வெ. சா. நூலகத்தில் உள்ளது.

**உலா**

உலா முழுமையும் கிடைத்துள்ளது. மொத்தம் 621 கண்ணிகள் உள்ளன. ஓரிரண்டு கண்ணிகள் அழிந்து பட்டன. பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என ஏழு பருவப் பெண்களின் மனத்தே தோன்றும் காதல் எழுச்சிகளை உலா சித்தரித்துச் செல்லுகிறது. பாடல்கள் மிகவும் நயமுள்ளவை. 17-ஆம் நூற்றுண்டு உலா இலக்கியத்துக்கு இதை ஓர் எடுத்துக் காட்டு எனலாம். உலாப் பாடல்களில் சிறந்த ஆதிஉலா, திருவானைக்காவல் உலா, புலியூர் உலா, கச்சி உலா, மூவருலா ஆகியவற்றை இதை இயற்றிய புலவர் நன்கு பயின்றவர்.

# புதுக்கோட்டைப் பகுதியில் பல்லவராயர் பட்டியல்

| பல்லவராயர்கள் பெயர் | அரசன் | காலம் | ஆண்ட ஊர் | Ref. புதுக்கோட்டை கல்வெட்டு எண் |
|---|---|---|---|---|
| சேரநாராயணப் பல்லவராயன் | சடாவர்மன் சுந்தர பாண்டியன் | ... | ... | 353 |
| சங்கரநாயனைப | .... | ... | ... | 354 |
| சேமனை ஆய்ப்பாடி ப ... | குலசேகர பாண்டியன் | ... | பேராம்பூர் | 587 |
| சீரங்கன் ப | மல்லிகார்சுன ராயர் | ச 1384 | பெருங்கோளி ஊர் | 711 |
| விழித்துறங்கும் பெருமாள் ப | தேவராயன் | ச 1397 | ... | 711 |
| தீராவினை தீர்த்தாரான வீரநரசிங்கராய நாயக்க ப | தேவராயர் | ச 1438 | வழுத்தூர் | 726 |
| சொக்கனர் ப | அச்சுதராயர் | ச 1452 | விறையாச் சிலைபற்று | 745 |
| சிவந்தெழுந்தான் திருமலராச ப | அச்சுதராயர் | ச 1461 | வழுத்தூர் | 752 |
| அச்சுத பல்லவராயர் | ... | ச 1511 | வழுத்தூர் | 860 |
| மகன் மல்லப்ப ப | ... | ச 1537 | வழுத்தூர் | 866 |
| ஆவுடைநாயனர் ப | ... | ச 1529 | வழுத்தூர் | 864 |

**ஆண்டு தெரியாத பல்லவராயர்**

| | | | | |
|---|---|---|---|---|
| ஆளுடை நாயனர் ப | .... | | பெருங்கோளி ஊர் அரசு | 558 |
| பிள்ளைப்பெருமாள் ப | .... | | .... | 903 |
| செம்பியன் ப | .... | | புதுவூர் | 960 |

# மல்லை சிவந்தெழுந்த பல்லவராயன் பேரில் உலா

## வெண்பா

தென்னன் வளவன் சிவந்தெழுந்த பல்லவனு
மன்னன் வழுதியுலா வண்டமிழ்க்கு-முன்னிற்க
ஒத்தகுணப் பத்திமன துத்தமர்சித் தத்துருக
தத்துமத தத்திமுகத் தான்.
தேவ ருலாவுடனே சேருந் திருவானைக்
காவ லுலாப்புலியூர்க் கச்சியுலா-மூவருலா
மல்லைச் சிவந்தான் வழுதியுலா வென்றெவருஞ்
சொல்லப் பகர்ந்தேன் றுணிந்து.

## நூல்

முகில்வண்ணன் கண்வளரு முண்டகப்பொற் கம்பு
நகில்வண்ணத் தாமரையாள் நண்பன்-றுகில் வண்ணப் 1

பூங்கமலத் துந்தியினில் பூத்தமறைப் புத்தேளு
மாங்கவன்றன் மைந்தனெனு மத்திரியும்-ஓங்குமவன் 2

தங்கு நயனந் தனிலுதித்த சந்திரனுந்
திங்கள் மரபில்வந்த தென்னவனு-மங்கவன்றன் 3

அம்மா மரபி லொருவன் றனிக்கயிலைப்
பொன்மால் வரையில் பொறித்தோனும்-பன்னகப் 4

பூவை தனைவேட்டப் போர்வேந்தன் போல்வளவன்
பாவை தனைவேட்டப் பாண்டியனும்-பாவைபாற் 5

றெண்டைமான் முன்வந்து தோன்றியவா றேதோன்றி
யெண்டிசையுங் காத்த யிருவோரு-முண்டாக 6

முன்னவன் றங்க முடிசூட்டி வீற்றிருப்பப்
பின்னவன் பொன்மகுடம் பெற்றிடுமுன்-தென்னவன் 7

செம்பியர் கோமான் றிருமகளை வேட்பித்துப்
பைம்பொன் மருகனெனப் பாவித்து-நிம்பமெனும் 8

பல்லவமே சூட்டிமுடி பாலித் தரசிருந்து
பல்லவதே சம்புரக்கும் பல்லவனும்-சொல்லுனு 9

இதை வெளியிட அன்போடிசைந்த உ. வெ. சாமிநாதய்யர் நூலகத்தார்க்கு நன்றி.

எம்மான் றனையனுகி யார்த்தார் புலிக்கொடிபெற்
றிம்மா நிலம்புரக்கு மேந்தலு-மம்மான்றன் 10

பாசமிகு நேசத்தால் பல்லவ ராயனென
தேசமெல்லாஞ் செங்கோல் செலுத்துநாள்-வாசல்தனில் 11

தப்பில் புகழான் சமமென்னுந் தீட்டரசர்
கப்பமிட ஒப்பமிடுங் காவலனுந்-துப்பமர்போர் 12

தந்துநள னோடு தமையந்தி கல்யாணப்
பந்தரில் வந்துநின்ற பல்லவனும்-முந்தொருநாள் 13

பாராருஞ் சீவகர்கொள் பல்லவதே சத்தனுகச்
சீரால் விருந்தமைத்த சேவகரும்-போராடித் 14

தொல்லை யறந்தாங்கித் தொண்டைமா னைத்துரந்து
மல்லை யரசிருந்த மன்னவனும்-தில்லை 15

யிரும்பதியிற் பல்லவ னீச்சரமுண் டாக்கிப்
பெரும்பதிகம் பெற்ற பிரானுங்-கரும்பகட்டிற் 16

கல்லவன் றன்கொணர்ந்து காவிரிப்பூம் பட்டணத்துப்
பல்லவ னீச்சரஞ்செய் பார்த்திபனுந்-தில்லைமன்றுள் 17

ஆடற் கிசைந்த யரியதமிழ்ச் சுந்தரர்தம்
பாடற் கிசைந்தபுகழ்ப் பல்லவனும்-சூடுமுடிக் 18

காடவர்கோன் பல்லவனுங் கட்டுகழற் சிங்கரெனப்
பாடியதொண் டத்தொகையிற் பல்லவனு-நாடியான் 19

பாட்டங் களைந்திட்டு பாடலபுத் தூரிலமண
கோட்டங் களைந்திட்ட கொற்றவனுந்-தீட்டுதமிழ் 20

கூடற் றலைச்சங்கம் கொண்டாட இன்பயனூர்
பாடற் குரையெழுதும் பல்லவனும்-வீடுற்றூர் 21

சூடுதிருக் காஞ்சியினிற் சொல்லிய வண்ணமென
பாடுதிரு வாய்மொழியிற் பல்லவனும்-நீடுபுகழ் 22

ஏறிய காஞ்சியிடத் தேலா திதுவென்று
கூறிய அவ்வைதமிழ்க் கொண்டோனும்-தேரிய 23

காவிரி நாடன் கலிங்கத் தமிழ்ப்பரணி
பாவினில் வீறுமொழிப் பல்லவனும்-மூவருலா 24

பாத்தன் தமிழினுமுன் பாடும் பரணியினும்
கூத்தன் கவிகொண்ட கொற்றவனும்-நாத்தழும்ப 25

மெச்சியத் தத்துபரி மேலாநின் றேகம்பர்
கச்சியுலா வில்வந்த காவலனும்-அச்சமுறப் 26

பூபதி சீறப் பொழுதுபடா வென்றம்பி
காபதி செந்தமிழால் கட்டுரைப்பக்-கோபம் 27

ஒழியாத அம்மான் உறவுவிட்டுத் தந்தை
வழியான பாண்டியன்பால் வந்து-செழியர்குலக் 28

கேடு களைந்துநல்ல கேரள சிங்கவள
நாடு புரந்த நராதிபனும்-சூடுகழல் 29

மேலான மன்னர்முடி மேலிருத்தி யோர்புலவன்
காலா லுதைபட்ட காவலனுந்-தோலாத 30

வாளான பட்டு மழவனெனப் பார்புரந்த
வேளாளன் மாமகளை வேட்டோனும்-தோளாரும் 31

தாதகிக்கும் வேம்புக்குந் தானடுவே காவிமலர்ப்
போதிருக்கச் செய்த புரவலனும்-மாதவத்தோர் 32

தாளில் விழச்சங்கு சக்கரமுங் கைக்கொண்டு
கோழி நகர்ப்பிறந்த கோமானும்-வாளமரில் 33

வாடாத மாலைசங்கு மல்லாரி வாலமதி
கூடாற் பகற்பந்தங் கொண்டோனும்-வேடனு 34

லோடத் திருந்த வொருவன்போ லாறுகாற்
பீடத் திருந்த பெரியோனு-மாடற்போர் 35

பாயும் பரியேறி பல்லவ ராயனென
ராயர்பேர் கொண்ட நராதிபனும்-மாயனைப்போல் 36

வாரைப் பதியளித்து பல்லழிம்பில்ச் சூறைகொண்டு
சூரைக் குடிகவர்ந்த தூயோனும்-சீரொத்த 37

பேராள னெங்கள் பெரியுடையான் பல்லவர்கோன்
பாராள் திருமேனிப் பல்லவர்கோன்-சீரார் 38

அருந்தமிழ்தேர் நீதி அழகன் மகிபாலன்
பெரும்புகழ் தெய் வங்கள் பெருமாள்-கருந்துளப 39

மாமா லைதி னெட்டு வன்னியர்கண் டன்பனுவற்
பாமாலை மாலையிட்ட பல்லவர்கோன்-மாமாயன் 40

அய்யனென்.காரனென்னும் ஆடல் மதரூபன்
செய்யநர பாலனென்னும் செஞ்சிலைவேள்-துய்ய 41

பழுதி லதிகாரன் பல்லவ ராயன்
வழுதிமா னங்காத்த வள்ளல்-தொழுதுதின 42

மண்டலர்கள் போற்றும் அடைக்கலங்காத் தான்மகிபன்
தண்டமிழ்க் கோட்டந் தவிர்த்தபிரான்-அண்டும் 43

அடியார்வே ளைக்கார ஞனபல்ல வேசன்
முடிபாத்தா னென்று முகுந்தன்-நெடிய 44

கலைசேர் நரலோக கண்டபூ பாலன்
குலசே கரனென்னுங் கோமான்-சிலைசேரும் 45

கன்னல்வில் மாரன் களபத்தை வென்றபிரான்
தென்னவ னென்னும் செயதுங்கன்-மன்னுதித்த 46

கொற்றவன் காட்சி கொடுத்தா னெனும் போசன்
பற்றலரெண் வில்லிபுத்தூர் பல்லவர்கோன்-வெற்றியினல் 47

அட்டதிசை மெச்சும் அதிவீர பாண்டியன்
பட்டனுக்காய் மீண்டருளும் பல்லவர்கோன்-வட்டமிடும் 48

பூவலயம் போற்றும் புகழரசன் பல்லவர்கோன்
சீவலவ னென்னுஞ் செயதுங்கன்-பாவரென் 49

நாவுடையான் அய்யன் நயினன் நரபாலன்
ஆவுடையா னென்னு மகளங்கன்-மாவடிவேல் 50

நச்சரவிற் பள்ளிகொள்ளு நாலூரிற் பல்லவர்கோன்
அச்சமறி யானென்னும் ஐங்கணைவேள்-மூச்சகமென் 51

பாலரெங்கு மாள்கின்ற பாஸ்கரநா ராயணவேள்
சீரங்க னென்னுஞ் செயதுங்கன்-காரங்கச் 52

செங்கை முகுந்தன் சிவந்தெழுந்த பல்லவர்கோன்
பங்கில் சிங்கனெனப் பார்த்திவர்கோன்-செங்கதிர்சேர் 53

காலையிங் கீரனூர் கடுமுச்சி யில்றெலுங்கூர்
மாலையிற் கூத்தனூர் வாங்கியபின்-வேல்கமுவும் 54

சீரங்கப் பல்லவர்கோன் செயபார சங்கிலிக்கோன்
சாரங்கன் கட்டாரி சாளுவர்கோன்-வீரங்கொள் 55

வல்லைய ராயன் வளராமப் பல்லவர்கோன்
பல்புகழான் கோனேரிப் பல்வர்கோன்-கல்விபயில் 56

சீமானெனவாழ் திருமகுட பல்லவர்கோன்
கோமான் விழித்துறங்குங் கொற்றவர்கோன்-மாமாரன் 57

திண்பார் புறக்கும் திருமலைரா சன்கடவுள்
பண்பார் திருநீற்றுப் பல்லவர்கோன்-வண்பாராள் 58

மன்னர் பரவுதிரு மாஞ்சோலைப் பல்லவர்கோன்
பன்னு தமிழளகன் பல்லவர்கோன்-என்னுமிவன் 59

மாபா ரதம்பொருத மாயனைப் போ லெல்லாரும்
பூபாரந் தாங்கிப் புரந்ததற்பின்-கோபாலன் 60

மெச்சுதமிழ் யிச்சையினில் விச்சைபயில் முச்சகமென
பச்சைமுகில் அச்சுதப் பல்லவனும்-அச்சுதப்பன் 61

செல்வக் குமாரன் செழுங்கருப்பு வில்குனித்த
பல்லப்பன் மல்லப்பப் பல்லவனும்-மல்லப்பன் 62

பின்னன் இளைய பெருமாள் பெருந்தமிழ்விற்
பன்னன் சிவந்தெழுந்த பல்லவனும்-பின்னவனும் 63

அத்திக் கிளையகுகன் ஆவுடையான் பல்லவனும்
பத்திச் சிதம்பரனும் பல்லவனும்-முத்தப்பப் 64

பல்லவனுங் கந்தப்பப் பல்லவனும் மல்லப்பப்
பல்லவனும் பல்லாண்டு பார்பரப்ப-எல்லவரும் 65

பாருலகமெல்லாம் பரித்தபொறை யாற்றுதற்காய்
ஓருருவ மாக வுதித்தருள்வோன்-வீர 66

மருவுமு தாரகுண வண்மையெல்லா மொன்றாய்த்
திருவவதா ரஞ்செய்த செம்மல்-உருவங் 67

கரியபெரு மாள்முகங்கால் கண்கமலம் பூத்த
பெரியபெரு மாளருமைப் பிள்ளை-தரையிற் 68

சிறந்தகா லம்பரித்த செம்பொன் முடிவேந்தற்
கிறந்தகா லம்பரித்த வேந்தலன்-நிறைந்தவடி 69

வேலன் புகழ்வழுதி வேந்தன் செயந்தனர
பாலன் சிவந்தெழுந்த பல்லவர்கோன்-ஞால 70

மருவுதுரை அச்சுதன்சேய் மல்லப்பன் பாவை
திருவுதரம் வாய்த்த சிறுவன்-பொருமதனன் 71

மேதினிக்கோன் மல்லப்பன் மெச்சு திருமலை
னாதனுக்குஞ் சோழனுக்கு நன்மருகன்-நீதி 72

தருமாயன் மல்லப்பன் தம்பி சிவந்த
பெருமா ளிருவருக்கும் பேரன்-தருமானும் 73

சோமன் திருக்குலத்திற் தோன்றிடினும் சோழனெனு
மாமன் திருப்பேர் வனைந்திடுவோன்-பூமன் 74

சிரம்பெற்ற செங்கைச் சிகைநாதர் தாளில்
வரம்பெற்றுப் பெற்ற மதலை-குரம்பெற்ற 75

பாலாறு வெள்ளாறு பைம்பொருனை வைகையெனும்
நாலாறு பெற்ற நரபாலன்-மேலான 76

கொல்லி மலையும் குடுமியார் மாமலையும்
வல்லி மலர்ப்பொதிய மாமலையும்-சொல்லியசோ 77

னாடு பெருவா சல்நாடு பைங்காட்டு
நாடு கபிலைவளர் நன்னாடு-நீடு 78

குளமங் கலநாடு கோனாடு பாண்டி
நளவெங்கள் தொண்டைவள நாடன்-வளமெங்கும் 79

புல்லு மதுரா புரிவேட்டம் பாண்டிகச்சி
மல்லைபெருங் கோழி வழுதியான்-வில்லவனைத் 80

தாங்கப் பதாகையான் தார்வேம்பான் தாதகியான்
வேங்கைப் பதாகையான் மீனத்தான்-ஓங்குநல 81

வட்டத்து வைத்தகன வட்டத்தான் வெல்களிற்றுன்
கொட்டத்து வைத்த கொடிமுரசான்-சட்டமிடும் 82

செங்கோலான் வெண்குடையான் சேமன் விருதளித்துச்
சங்கோடு வெண்பிறையும் தாங்கினேன்-நங்கோமான் 83

தென்னவன் வீரநர சிங்கன் பதினெட்டு
மன்னியர் கண்டன் வரராமன் முன்னாள் 84

வழுதிக்குங் பட்டனுக்கும் மானிபம் காத்தோன்
தொழுதிக்கு வேள்பணியுந் தோன்றல்-வழுதினா 85

டாலங் குடிநா டமரா பதிநாடு
கோலங் கடுவங் குடிநாடு-மேலான 86

செங்காட்டு நாடு திருப்பேரை யூர்நாடு
மங்காத நல்ல வளநாடு-கொங்காரும் 87

மெய்ய மலைநாடு மேவுசந்தி ரேசைனா
டையன் கொடுங்குன் றணினாடு-செய்யதிருக் 88

கோளக் குடிநாடு கோனாடெனப் புரந்தே
ஆளப் பிறந்த அரசர்கோன்-மீளவொரு 89

கற்பக தாதுவுக்கு கண்கரங்கால் தோள்மார்ப
மற்புத மாத வமைத்தருளி-பொற்பாற் 90

நடையுடை பாவனைகள் நாகரிகம் இன்சொல்
விடைவுரு சற்குணமுண் டாக்கி-தொடையுதவு 91

வேளாண்மை சீர்த்திவி வேகம் பெருஞ்செல்வம்
தாளாண்மை யித்தனையும் தான்படைத்து-வாளாண்மை 92

சீரிட் டயனார் சிவந்தபெரு மாளென்றோர்
பேரிட்டு வைத்த பெருந்தகையோன்-நேரிட்ட 93

ஒன்னா உடலத்து உதிரநீர் ஊற்றிருக்கும்
மின்னார் சுடர்வடிவை வேலினான்-முன்னாளிற் 94

வேயைத் துளைத்த விழுக்கோ லெனத்தரியார்
வாயைத் துளைத்தவடி வாளினான்-நேய 95

விழியேவி நாணிநின்றி மெல்லியர்போ லம்புக்
கரியேவி நின்றசிலைக் காமன்-செழியர்குலன் 96

கோகருணை யார்விழிபோலக் கூடாரைக் காய்ந்தெமக்கு
மாகருணைச் செந்தா மரைக்கண்ணன்-ஆகருணை 97

உண்ணா முலைதனைவென் றோர்வடிவா யாண்வடிவாய்
எண்ணான் கறமும் இயற்றிடுவோன்-கண்ணாற் 98

புருவத்தை வென்ற புலிக்கொடியான் ஒன்னார்
மருமத்தை வென்ற மணிமார்பன்-பொருவடிவம் 99

நூற்றொருவன் றன்வடிவாய் நூற்புலவர் கொண்டாட
மாற்றொருவ ரில்லா மறுதுங்கன்-வேற்றொருவர் 100

சொல்விக்கச் சொல்லாது தானே சுதந்தரமாய்
கல்விக் கடலைக் கரைகண்டோன்-செல்வக் 101

கடலான் மடவார்கள் காதலிக்கும் பெண்ணை
மடவான் மடலுலா மாலை தொடையுலாம் 102

பற்பல சந்தம் பரணிமணிக் கோவைமுதற்
பெற்பொலி யந்தாதி பூச்சின்னம்-சொற்பொருள்கள் 103

ஆலப்ர வஞ்சம்போ லாகியதொண் ணூற்றாறு
கோலப்ர பந்தங்கள் கொண்டபிரான்-வாலன் 104

அறிவால் முதியன் அமுதகுணன் நீதி
பிறியான் முதியமதிப் பிள்ளை-நெறிமால் 105

தலைத்தொண்டை மான்மழுவன் சாமந்தன் இன்னோர்
குலத்தொண்டை மண்டலத்தார் கோமான்-மலைக்குடுமி 106

நாதர்க்கும் கோக்கருணை நம்பர்க்கும் பேரையூர்
வேதர்க்கும் நிம்பவன மெய்யர்க்கும்-சூதத் 107

திருக்காஞ்சி நம்பர்க்கும் செய்த படியே
பெருக்காஞ்சி சிறப்பருளப் பெற்றேன்-உருக்காமன் 108

சைவர்க்குள் நேயன் தவம்போற் சிலைபரிவாங்
கைவர்க்கு நேரா மகளங்கள்-தெய்வ 109

குறுமுனிவன் போலவொரு கும்பத்து அடங்காச்
சிறுமுனிவன் ஆதுலர்க்கோர் தெய்வம்-அறுசுவையும் 110

சேடத் தருந்தி திருமுகமு மின்சொல்லும்
கூடத் திருத்தும் கொலக்கொழுந்து-மேடத்தின் 111

முன்னும் பிறந்தரசர் மூன்றுமிளங் கன்னிக்கு
பின்னு மென நடக்கும் பெற்றியான்-சொன்னமொழி 112

தப்பாத பல்லவர்தம் சந்ததிக்குண் டாயகுண
மெய்ப்பாக யான்சொல்ல வேண்டுவோம்-ஒப்பாக 113

பாட்டிற் கடங்காத பண்பன்றோ பாவலர்தம்
ஏட்டிற் கடங்கா இயல்பன்றோ-வேட்டொன்றை 114

நூறுகால் நூற்றிடினும் நூற்பதே நாவலர்க்குக்
கூறுகாற் பங்கிலொன்று கூடுமோ-ஆறுகாற் 115

சிங்கா சனத்திருந்து செங்கோல் முறைசெலுத்திச்
சங்காழி செங்கரத்தாற் தாங்கியே-தூங்க 116

மனுசக்ர வர்த்தியைப் போல் மண்டலஞ்சே ரானை
தனிசக் கிரமங்கே தந்து-தொனிக்கல்வி 117

கண்ணோட்ட மச்சம் கடுஞ்சொற் படையமைத்து
பெண்ணோட்டம் சுற்றம் பிழையாமை-விண்ணோட்டம் 118

ஊக்கம் வலிகாலம் ஒற்றறிவு கேள்விபொருள்
ஆக்கம் துடர்பனைத்தும் ஆராய்ந்து-தூக்கமிகல் 119

அன்றி மிகையைந்தோ டாறடக்கி யேழ்கடிந்து
குன்றிவரி வேங்கைக் குருளைக்கும்-சென்றுமுலை 120

புல்வா யருத்திப் புரந்தும் புலம்பகற்றிச்
செல்வாய் திறந்த சிகாமணியே-பல்வாசல் 121

அத்தாணி மண்டலத்தன் பத்தாறு தேசத்து
முத்தாணி மன்னர் முடிநெருங்க-சத்தாங்கம் 122

கொண்டு திரையளப்ப கோல வடவரைமேல்
செண்டும் கயலும் செலுத்தியே-ஒண்டொடியார் 123

தட்டியா லாத்திசிலர் தாங்கத் தயங்குதீ
வட்டியார் நூற்றொருவர் வந்துநிற்ப-வொட்டலார் 124

கோலக் கபாடக் குடுமி நடுநடுங்க
வோலக்க மண்டபத்தி லோங்குநாள்-ஞாலத்து 125

வந்தபதி னெட்டு மன்னியரும் கல்யாணப்
பந்தர் நிழற்கீழ்ப் பணியியற்றி-அந்தணர்கள் 126

பல்லியாண் டிசைப்பப் பரராசர் மண்டலிகர்
கல்லியாணங் கண்டிரண்டு கண்களிப்ப-தொல்யாண் 127

டருப்பஞ்ச பாண்டவர்க்கு மன்றுகிடை யாத
திருப்பஞ்ச கல்லியாணஞ் செய்து-விருப்பஞ்சேர் 128

போகங்க ளெட்டும் பொருளெட்டும் நீங்காது
மோகங்க ளெட்டு முறைபுணர்ந்து-நாகங்கொள் 129

பள்ளி யறையிற் பரிவோ டினிதமர்ந்து
வெள்ளி குணபாற் வெளிப்படுமுன்-அள்ளி 130

புனற்கட ஞற்றிநுதற் புண்டரமுந் தீட்டி
கனற்கட ஞகவுரி கம்பா(ர்)-யினக்குடுமி 131

நாதர்மிகுங் கோக்கருணை நம்பர் பதஞ்சேவித்து
வேத மறையோர்க்கும் வேண்டுவன-போத 132

வதுவைக் கடனனைத்தும் மாறா தளித்து
விதுவைக் கடைந்தனைய வெண்சோ-றதுவருந்தி 133

தென்புலத்த ராதியார் செய்தமைத்து பொற்கலத்து
தன்புலத்த வாரமுதந் தானருந்தி-பின்புலர்த்தி 134

வாதாம் பரராசர் மக்கர் வரவிட்ட
பீதாம் பரம்பொற் பிரபைவீச-சேதாம்பல் 135

ஆம்பட் டுடைவா ளழகெறிப்ப வாங்கதன்மேல்
மேம்பட் டுடைவாளும் வீக்கியே-தாம்பட்டம் 136

உற்ற கடாரத் துயர்வேந்தர் கப்பமிடும்
பொற்றக டார்மகுடம் பொற்பெறிப்பச்-சுற்றுவிரல் 137

மோதிரங்க ளெட்டு முழுநீல வச்ரமணி
மாதிரங்க ளெட்டும் வயங்கியிடப்-பூதலங்கொள் 138

மண்டலங்க ளெட்டும் மதிக்கு மணிமகர
குண்டலங்க ளிட்ட குழைதயங்க-விண்டலங்கொள் 139

மாகுவலை யங்கள் மதிக்குஞ்சும் மாடெனலாய்
வாகுவலை யங்கள் வயங்கியிட-நீகு 140

வடகங்கை வேந்தர் வரவிட்ட ரெற்றினக்
கடகங்கை வேய்ந்து கதிர்ப்ப-வடதிசைக்கோன் 141

கொண்டசரக் கொத்து குவலையமெல் லாமதிக்குங்
கண்டசரக் கொத்து கழுத்திலிட்டு-தண்டரள 142

வன்னங் குடக்கு வடகெல்லாஞ் செயவீர
சன்னங் கிடக்குந் தகையிலங்க-துன்னு 143

புகைக்கக் கழற்காற் பொறியென்று மேலோர்
திகைக்கக் கழற்காற் செறித்து-மிகப்பொதியப் 144

தாதை வரவிட்ட சந்தனச் சேருடிக்
கோதை வரவிட்ட கொல்யானை-மேதையுறக் 145

காமன் வரவிட்ட கார்முகில்போ லேமுழங்கும்
மாமன் வரவிட்ட மால்யானை-சேமமாய் 146

அட்டத்து வந்துநிற்ப அட்டகுல வெற்பென்ன
பட்டத்து யானை பல நெருங்கக்-கொட்டமிடு 147

நற்கலிங்க தேசத்து நால்வாய் குலைவேழங்
கற்கலிங்கு போலக் கடாந்திறப்ப-கொற்கையர்கோன் 148

வாழும் மதலையெனும் வாஞ்சைக்காய்த் தானறுப்பு
ஏழு முழமொன் றெதிர்நிற்ப-தாழமிடு 149

வன்படிமேற் கொண்டு வரையே றுநர்போலப்
பொன்படிமேற் கொண்டு பிடரேறி-விண்படர 150

ஆணிக் கதிரோன் அமுதம் சொறிவன்போற்
மாணிக்க வெஞ்சா மரையிரட்ட-பாணி 151

உவரி நுரைக்கவுரி யூடுசென்று வைத்தோற்
கவரி குலவிருது காட்ட-நவுரிதுடி 152

கொக்கரை ஆம்பல் குழல்வீணை சேகண்டை
சக்கரங்கொ டூத குனிசம்பு-புக்கியம்ப 153

அங்கை பிரிந்திங்கே யவதரித்தா னென்றெற்றைச்
சங்கு கிடந்து தனித்தலறப்-பொங்குசதி 154

மத்தளந் தத்த மழலை யொலிததும்பத்
தத்தளந் தத்தத் தளங்கவெனக்·கொத்தனத்துந் 155

தாபரத்து மேடைத் தலத்தும் மதிப்புரத்தும்
கோபுரத்து நின்று கொடிநுடங்க-நூபுரத்து 156

வஞ்சியர் பொன்னடப்பை வாங்கச் சிறுகுடுமிக்
குஞ்சியர்கள் குஞ்சங்கள் கொண்டுவர-செஞ்சியர் 157

கொல்லந் தெலுங்கு கொச்சி கோழிக்கோ டச்சமச்சம்
வல்லந் துளுக்குடகு வங்காளம்-கல்யாணம் 158

ஒட்டியங் கொங்கணங்கள் ஒக்கவர முன்னின்று
கட்டியங் கூறிக் கரந்துளக்க-வட்டில் குடை 159

கண்ணுடி ஆலவட்டங் கற்பூரப் பேழைமுதல்
எண்ணு யிரம் பேர் எடுத்தேந்த-விண்ணுரும் 160

சங்கு பிறைபாரச் சங்கிலியு முன்னடப்ப
கொங்கர் சிலர் வணக்கங் கொண்டுவர-செங்கயலும் 161

வெற்றிக் கிளைப்பகட்டு மேழித் தனிக்கொடியும்
ஒற்றைப் புலிக்கொடியும் ஓங்கிவர-வெற்றிக் 162

களப மதயானை கச்சியர்கோன் வந்தான்
வளவர் திருமருகன் வந்தான்-துளப 163

பிரசத் தொடையான் பெரிய பெருமாள்
வரிசைத் திருப்புதல்வன் வந்தான்-குரிசில் 164

பழுதில்வணங் காதமுடி பல்லவர்கோன் வந்தான்
வழுதி குலப்பெருமாள் வந்தான்-வழுதிச் 165

சிவந்தபெரு மாளென்னும் சேவகன்வந் தானென்று
உவந்தமணிச் சின்னங்கள் ஊத-நிவந்தமுது 166

நெட்டைப் பெருங்கழுத்து நீட்டியளந் தொன்பது சாண்
ஒட்டைப் பெரும்பணைமேல் ஓங்கியெழக்-கட்டைத் 167

துடியடி பின்தொடர்ந்து தூங்கற் கறைக்காற்
பிடியடி பேரி பிறங்க - நெடிய 168

பகற்பந்தம் பஞ்சவண்ணப் பாவாடை யென்னும்
விகற்பந்தஞ் சின்னமென்ன மேவும் - அகற்பந்தம் 169

தோன்று மினிய சுனைமுழக்கம் போலவெதிர்
மூன்று முரசு முழங்கவே - ஆன்றகிளைப் 170

பல்லவரும் வாசல் பழையோரு மந்திரிக
ளெல்லவரு நண்பா மிளையோருஞ் - சொல்லவரும் 171

பாடப்ர பந்தகவிப் பாவலரு நாவலரும்
ஆடப்பிறந்த அரிவையரும் - கூடல் 172

மதுரா புரிசெஞ்சி வஞ்சிதஞ்சை யுஞ்சை
அதிரா சதமன் னவரும் - பதிராச 173

வட்டத்தார் பட்டு மழுவர்திறற் சாமந்தர்
இட்டத்தார் ஓலையெழுத் தார்கன - வட்டத்து 174

ஆதோ ரணரவர் ஆளாளர் தாளாளர்
தூதோ னிரொற்றர் சோதிடத்தர்-தாதோது 175

சேனு பதிகள் சிவிகைப்பரிப் போர்மதங்கர்
தானு பதிகள் தராபதிகள் - கோனுடர் 176

ஆதியர் ஐந்துநா டாளர்கா ணிக்கர
சாதியர் வர்கடத்தர் தாபதத்தர் - சேதியரா (பி) 177

மன்னர் பதினெட்டு மன்னியர்கள் கன்னியர்கள்
தென்னர் மலைநாடர் செம்பியர்கள்-என்னுமிவர் 178

வல்லாத வேளிர் அடுமடையர் மல்லர்முத
லெல்லாருஞ் சூழ்தந் தெழில்விளங்க-கொல்லார 179

வண்டில் கரிபரிதேர் வண்சிவிகை அந்தளங்கொண்
டெண்டிசை(யு) மட்டு மிடமின்றி-மண்ட 180

புரவி நடத்தி புகர்முக வெற்றி
கரட மதக்கைக் களிறு-விரவ 181

இரத நடப்பித் இடப நடத்தி
பொருமுர சேற்றிப் பொருனர்-கரதலத்து 182

வில்வாள் பரிசைகுந்தம் வேல்வல்லையமுதலாம்
பல்லா யிரமா யிரம்பரப்ப-மல்லாரி 183

பம்பக் கரத்தர் பணிச்சிறைகொண் டோச்சிமதத்
தும்பிக்கை வீசுந் துளிதெறிப்பச்-செம்பொன் 184

கலைபுலியின் தோலாகக் கச்சியர்கோன் ஒன்னுர்
நிலையிதுவென் றேசிலபேர் நிற்ப-மலர்மகளும் 185

மேனகையும் இந்திராணி யென்னுந் திலோத்தமையும்
பானகையாற் கொல்லுமிளம் பாவையரும்-ஜானகியும் 186

காமன் துணையும் கரும்பும் பசுந்தேனும்
பூமன் பசுஞ்சோலைப் பூங்கிளியும்-தேமன் 187

குயிலுங் களியனமும் பூவையுங் கூந்தல்
மயிலும் பசும்பிடியும் மானு-மியலுமின்னுர் 188

( அடுத்த இதழில் தொடரும் )

# பன்னிரண்டு சூரியர்

## (துவாதச ஆதித்தர்)

மயிலை சீனி. வேங்கடசாமி

சைவ சமயத்துத் தெய்வங்களில் பன்னிரண்டு சூரியர்கள் உள்ளனர். சைவ சமய நூல்கள் பன்னிரண்டு சூரியர்களைக் கூறுகின்றன. அவர்களுடைய பெயர்களாவன. 1. வைகர்த்தர், 2. விவஸ்வதர், 3. மார்த்தாண்டர், 4. பாஸ்கரர், 5. இரவி, 6. உலோகப்பிரகாசர், 7. உலோக சாட்சி, 8. திரிவிக்ரமர், 9. ஆதித்தர், 10. சூரியர், 11. அம்சுமாலி, 12. திவாகரர் இவர்கள் ஒவ்வொருவரும் பன்னிரண்டு திசைகளில் இருக்கின்றனர்.



இவர்கள் உருவம் நின்ற நிலையில் அமைக்கப்படும். இவர்கள் உருவங்களின் அமைதியும் கூறப்படுகின்றன. அந்த விபரங்கள் வருமாறு:

1. வைகர்த்தர் : இவர் ஒரு முகமும் இரண்டு கைகளும் உள்ளவர். இரண்டு கைகளிலும் பொற்றாமரைப் பூவை நாளத்தோடு பிடித்துத் தோளின் மேல் சார்த்தி வைத்திருப்பார். மஞ்சள் நிறஆடை அணிந்து பொன் அணிகள் அணிந்திருப்பார்.

2. விவஸ்வதர் : இவருக்கு இரண்டு முகங்களும் நான்கு கைகளும் உண்டு. மேல் இரண்டு கைகளில் தாமரைப் பூக்களை ஏந்தித் தோளின் மேல் சார்த்திக் கொண்டு கீழ் இரண்டு கைகளில் அபய முத்திரையும் வரத முத்திரையும் உள்ளவராக இருக்கிறார். சிவந்த நிறமான பவள நகைகளை அணிந்திருப்பார், பிங்கள நிற ஆடை, அல்லது பொற் பட்டாடை அணிந்திருப்பார்.

3. மார்த்தாண்டர் : இவருக்கு மூன்று முகங்களும் ஆறு கைகளும் உண்டு. மேல் இரண்டு கைகளில் தாமரைப் பூக்கள். இரண்டு கைகளில் ஜபமாலையும் கமண்டலமும் ஏந்தியிருப்பார். இரண்டு கைகளில் அபய வரத முத்திரைகள். முத்து மாலைகளை ஆபரணங்களாக அணிந்திருப்பார்.

4. பாஸ்கரர் : இவருக்கு இரண்டு முகங்களும் நான்கு கைகளும் உண்டு. இரண்டு கைகளில் தாமரைப் பூக்கள் ஏந்தியிருப்பார். மற்ற இரண்டு கைகளைக் கூப்பிச் சிவபெருமானைக் கும்பிடும் நிலையில் இருப்பார். சிவப்பு நிறமுள்ளவர். சிவந்த ஆடை அணிந்திருப்பார். நீலக்கற்கள் பதித்த நகைகளை அணிந்திருப்பார்.

5. இரவி : இவர் நான்கு முகங்களையும் எட்டுக் கைகளையும் உடையவர். கைகளில் ஜபமாலை கமண்டலம், சூலம், பாசம், அங்குசம், தாமரை, அபயவரத முத்திரைகள் இருக்கும். சிவந்தநிற ஆடை அணிந்து, பச்சைக் கல் (மரகதக் கல்) இழைத்த ஆபரணங்கள் அணிந்திருப்பார்.

6. உலோகப் பிரகாசர் : ஐந்து முகமும் பத்துக் கைகளும் உள்ளவர். இவர் நிறம் கறுப்பு. இரண்டு கைகளில் தாமரைப் பூக்கள். இரண்டு கைகளில் சூலம் அங்குசம். மற்றும் இரண்டு கைகளில் தண்டு ஜபமாலை. இன்னும் இரண்டு கைகளில் அம்புவில். நீல நிறப்பட்டாடை உடுத்து நீல நிறக்கற்கள் பதித்த நகைகளை அணிந்திருப்பார்.

7. உலோக சாட்சி : இவருக்கு ஒரு முகமும் இரண்டு கைகளும் உண்டு. இரண்டு கைகளையும் கூப்பிக் கும்பிடும் நிலையில் இருப்பார். வெள்ளை நிறமுள்ளவர். வெண்பட்டாடை அணிந்து இருப்பார் அல்லது வெள்ளைப் பருத்தி ஆடையைக் காஷாயம் (காவி) தோய்த்து அணிந்திருப்பார். உடம்பு முழுவதும் திருநீறு அணிந்திருப்பார்.

8. திரிவிக்கிரமர் : இவர் இரண்டு முகமும் நான்கு கைகளும் உள்ளவர். மேல் இரண்டு கைகளில் தாமரைப் பூக்களை ஏந்திக் கொண்டு கீழ் இரண்டு கைகளைக் கூப்பிக் கும்பிடும் நிலையில் இருப்பார். நீலக்கல் (கறுப்புக்கல்) பதித்த ஆபரணங்களை அணிந்து கறுப்பு (நீல)ப்பட்டு ஆடை அணிந்து கறுப்பு நிறம் உள்ளவராக இருப்பார்.

9. ஆதித்தர் : இவருக்கு ஒரு முகமும் இரண்டு கைகளும் உண்டு. கைகளில் செந்தாமரைப் பூக்கள் ஏந்தியிருப்பார். மாதுளம் பூப்போன்ற செந்நிறம் உள்ளவர். சிவப்புக் கல் பதித்த ஆபரணம் அணிந்து சிவந்த ஆடை அணிந்திருப்பார்.

10. சூரியர் : இவருக்கு ஒரு முகமும் எட்டு கைகளும் உள்ளன. இரண்டு கைகளில் தாமரைப் பூக்கள். மற்ற இரண்டு கைகளில் கண்டா மணியும் தூபகலசமும்; வேறு இரண்டு கைகளில் கமண்டலமும் ஜபமாலை யும். மேலும் இரண்டு கைகளில் அபயவரத முத்திரைகள். பொன் நிறம், பொன் ஆபரணங்கள் அணிந்திருப்பார். பொன் நிறப்பட்டாடை உடுத்தி யிருப்பார்.

11. அம்சுமாலி : இவருக்கு ஆறு முகங்கள் உண்டு. சிவந்த நிறம் உள்ளவர். பன்னிரண்டு கைகள் ,மேல் இரண்டு வல இடக் கைகளில் இரண்டு தாமரை மலர்களைப் பிடித்திருப்பார். வலப்புரம் பார்த்த நான்கு கைகளில் தோமரம், கத்தி, வாள், கேடயம் ஏந்தியிருப்பார். இடப்பக்கம் பார்த்த நான்கு கைகளில் பாசம், அங்குசம், வேல் வேதாளம் ஏந்தியிருப் பார். மற்ற வல இடக் கைகளில் அபயவரத முத்திரையுள்ளன.

12. திவாகரர் : இவருக்கு இரண்டு முகங்கள் உண்டு. நான்கு கைகள். இரண்டு வல இடக் கைகளில் இரண்டு தாமரைப் பூக்களைப் பிடித்திருப்பார். மற்ற இரண்டு இட வலக் கைகளில் வில்வம் ஏந்தி யிருப்பார். மஞ்சள் நிறப்பட்டு அணிந்திருப்பார்.

சில கோவில்களில் பன்னிரண்டு சூரியருடைய உருவங்கள் வைக்கப் பட்டுள்ளன. கங்கைகொண்ட சோழபுரத்துக் கோயிலில் பன்னிரண்டு சூரியர்களின் கற்சிலைகள் இருந்தன. மண்ணில் புதைத்துகிடந்த அந்தக் கற்சிலைகள் அண்மைக் காலத்தில் அகழ்ந்து எடுக்கப் பட்டுள்ளன.

# திருமலைக்கோயிலில் கண்டறியப்பட்ட புதிய கல்வெட்டுக்கள்

**R. பூங்குன்றன்,** M. A. Dip. Epigraphy & Archaeology
கல்வெட்டாய்வாளர், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

திருமலை என்ற ஊர் வடார்க்காடு மாவட்டத்தில் உள்ள சிற்றூராகும். ஆரணி போளூர் நெடுஞ்சாலையில் உள்ள வடமாதிமங்கலம் என்ற பேரூருக்கருகில் உள்ளது இவ்வூர். திருமலை பண்டைக்காலத்திலிருந்து சமணத்தின் பீடமாக விளங்கி வருகிறது. இவ்வூர்க் கோயிலில் உள்ள பண்டைக்காலக் கல்வெட்டுக்கள், சிற்பங்கள், ஓவியங்கள் ஆகியவை இவ்வூரின் வரலாற்றை அறிய உதவுகின்றன. திருமலையில் முதல் இராசராசசோழனின் தமக்கையான குந்தவை பிராட்டியார் ஒரு சமணக் கோயிலைக் கட்டினார். அக்கோயில் 'ஸ்ரீகுந்தவைஜினாலயம்' என்று அழைக்கப்பட்டது.[1]

திருமலைக்கோயிற் கல்வெட்டுக்களில் பல, ஏற்கெனவே பதிப்பிக்கப்பட்டுள்ளன.[2] சில கல்வெட்டுக்களின் செய்திகள் மட்டும் வெளியிடப்பட்டுள்ளன.[3] சென்ற ஆண்டு மூன்று கல்வெட்டுக்கள் புதிதாகக் கண்டறியப்பட்டன. அவற்றுள் ஒன்று சக ஆண்டு 803 ஐச் சேர்ந்ததெனலாம். மற்றொரு கல்வெட்டு இராட்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணனின் பதினைன்காம் ஆட்சி ஆண்டைச் சேர்ந்தது. இராசராசசோழனின் மனைவி இலாடமாதேவியார் பெயர் கூறும் கல்வெட்டு ஒன்றும் கண்டறியப்பட்டுள்ளது.

## 1. மூன்றாம் கிருஷ்ணன் கல்வெட்டு

இம்மன்னன் இராட்டிரகூட மரபைச் சேர்ந்தவன். திருமலைக் கோயிலில் இவனுடைய பத்தொன்பதாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு ஒன்று உள்ளது. புதியதாகக் கண்டறியப்பட்ட கல்வெட்டும் இக் கல்வெட்டின் அருகிலேயே பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டின் அருகிலேயே மதுரை கொண்ட கோப்பரகேசரியின் கல்வெட்டு ஒன்றும் உள்ளது. தொண்டை நாட்டில் மூன்றாம் கிருஷ்ணனின் பதினாறாம் ஆட்சி ஆண்டிலிருந்து கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன என்று பேராசிரியர் நீலகண்டசாஸ்திரியார் அவர்கள் கூறுவார்.[4] ஆனால் திருமலையில் கண்டறியப்பட்ட கல்வெட்டு அம்மன்னனுடைய பதினைன்காம் ஆட்சி ஆண்டைச் சேர்ந்தது என்பது மனங்கொளத்தக்கது. இக்கல்வெட்டில் 'கச்சியும் தஞ்சையும் கொண்ட கன்னரதேவன்' என்று குறிக்கப்படவில்லை. 'ஸ்ரீ கன்னர தேவன்' என்று குறிப்பிடுகிறான்.

**கல்வெட்டு**

1. ஸ்ரீ கன்னர தேவர்க்கு யாண்டு பதினாலாவது

இக்கல்வெட்டில் வேறு செய்தி எதுவும் குறிக்கப் பெறவில்லை. இக்கல்வெட்டினால் மூன்றாம் கிருஷ்ணன் தன்னுடைய பதினான்காம் ஆட்சி யாண்டுக்குப்பின் தான் 'கச்சியும் தஞ்சையும் கொண்ட கன்னரதேவன்' என்று தன்னைக் குறிப்பிட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்று கொள்ளலாம்.

2. இலாட மாதேவி

இலாட மாதேவி என்ற பெயர் குறிப்பிடும் கல்வெட்டு ஒன்று கண்டறியப்பட்டுள்ளது. தொண்டை நாட்டில் படுவூர்க்கோட்டத்தை இலாட மரபினர் ஆட்சி செய்தனர். தற்காலத்தில் பஞ்ச பாண்டவமலை என்று அழைக்கப்பெறும் மலையைச் சுற்றியுள்ள பகுதியை இவ்வரசர்கள் ஆட்சி செய்தனர் எனலாம். இவர்கள் சோழர் ஆட்சியில் குறிப்பிடத்தக்க அங்கம் வகித்தனர். இம்மரபைச் சேர்ந்த இலாடமாதேவி என்பாள் முதல் இராசராசசோழன் மனைவி ஆவாள். இப்பகுதியில் இன்றும் இலாடபுரம் என்ற பெயர் கொண்ட ஒரு சிற்றூர் உள்ளது. சோழராட்சிக்காலத்தில் முதல் இராசராசசோழன் காலத்தில் வீரசோழன் புகழ்விப்பார் கண்டன் என்ற பெயர் கொண்ட ஓர் இலாட மன்னன் வாழ்ந்துள்ளான். கல்வெட்டு மும்முடி சோழ…ராயன் என்ற பெயருடன் தொடங்குகிறது. மும்முடிச் சோழன் என்ற பெயர் கண்டராதித்தனுக்கும் முதல் இராசராசனுக்கும் உரிய சிறப்புப் பெயர். கண்டராதித்தன் காலத்தில் ஆட்சி செய்த இலாட அரசன் யார் என்பது புலப்படவில்லை. முதல் இராசராசனுக்கு முன் பின்னாக ஆட்சி செய்த இலாட அரசர்கள் பற்றிய குறிப்பு எதுவும் கிடைக்கவில்லை. கல்வெட்டின் தொடக்கத்தில் காணப்படும் பெயர் கண்டராதித்தன் காலத்தில் வாழ்ந்த இலாட மன்னனுடையதாக இருக்கலாம். கல்வெட்டில் குறிக்கப்பெறும் இலாடமாதேவி இம்மன்னனின் மனைவியாகலாம்.

**கல்வெட்டு**

1. ஸ்வஸ்தி ஸ்ரீ மும்முடிச் சோழ . . . .
2. டிராயன் தேவி இலாடமாஹாதேவி தந்தை
3. நிக்குந்தமாச்சயன் தம் தந்தையர்
4. விக்கடி அரைச(ர்)க்கு யஉ௲
5. மாக வைச்சிது சன்திராதி
6. த்த உள்ளளவும் இரக்ஷிய . . . .
7. . . . . . நா(ற்)பது கொண்டு இரக்ஷிப்பார
8. (டிகள்) என் தலை மேலின

மும்முடிச்சோழன் எனப் பெயர் கொண்ட முதல் இராசராச சோழனின் மனைவியருள் இலாடமாதேவி என்பவள் ஒருத்தி. இக்கல்வெட்டில் வரும் பெயர் அவளைக் குறிக்கும் என்று கொள்வது கடினம். காரணம், கல்வெட்டில் கூறப்படும் மும்முடிச்சோழன் என்ற பெயர் முதல் இராசராசனைக் குறிக்குமாயின் அவனுடைய ஆட்சி ஆண்டு குறிக்கப்

பட்டிருக்கும். ஆனல் இக்கல்வெட்டில் ஆட்சி ஆண்டு கூறப்பெறவில்லை. ஆகையால் இக்கல்வெட்டு முதல் இராசராசன் காலத்ததாக இருக்கும் என்று நம்ப முடியவில்லை. கல்வெட்டின் எழுத்து வடிவமும் காலத்தால் முற்பட்டது என்று கருதுவதில் தவறில்லை.

மூன்ரும் கல்வெட்டு

சகர ஆண்டு எண்ணூற்று மூன்ரும் ஆண்டைச் சார்ந்த கல்வெட்டு ஒன்று கண்டறியப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுப் பொறிக்கப்பட்ட கற்பலகை மூன்று துண்டுகளாக உடைந்து விட்டது. அவற்றில் இரண்டு துண்டுகள் மட்டும் கிடைத்துள்ளன. ஆகையால் செய்தியை முழுமையாக அறிந்து கொள்ள முடியவில்லை.

1. ஸ்வஸ்தி ஸ்ரீ சகரயாண் . . . . ண்ணூற்று மூன்று பங்கள நாட்டு
2. வைகவூர்த்திருமலையி . . . . . . . . . ட்டி அண்ணுத்தடிகளாகிய
3. பப துாகுனாஞ . . வைத்த . . . சியர்க்குச் சஞூாதிதூவற்கு
4. க வைத்த பொன் பதி . . . . . லிசையில்
5. பொன்னலே இவ்விரவாஹதரா க . . . . இப்பள்ளி யாளும் பிடாரர்க
6. ளிப்பள்ளியாளும் . . . . ன்ம
7. ரக்ஷித்தார(டி) என் தலைமே . . . .

இக்கல்வெட்டுக்கள் அனைத்தும் பார்வைப்படி (eye copy) செய்யப்பட்டவை. மேலே காட்டப்பட்டுள்ள கல்வெட்டும் பார்வைப்படி செய்யப்பட்டதுதான். இக்கல்வெட்டில் திருமலை, 'வைகவூர்த்திருமலை' என்று குறிக்கப்படுகிறது. பங்களநாட்டில் இருந்தது இவ்வூர். தற்கால வடார்க்காடு மாவட்டத்தில் உள்ள போளூர், வேலூர் ஆகிய வட்டங்களை உள்ளடக்கிய பகுதியே பண்டைய பங்களநாடு என்பர்.[5] கி. பி. 9-ஆம் நூற்ருண்டு வரை பங்களநாட்டு வைகவூர்த்திருமலை என்று கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. ஆனல் கி.பி. 10-ஆம் நூற்ருண்டைச் சார்ந்த மதுரைகொண்ட கோப்பரகேசரி கல்வெட்டில் 'பல் குன்ற கோட்டத்துப் பங்கள நாட்டு வைகவூர்த்திருமலை' என்று குறிக்கப்பெறுவது நோக்கத்தக்கது.[5a] ஆகவே மதுரை கொண்ட கோப்பரகேசரியின் காலத்திலிருந்து பல் குன்ற கோட்டம் என்ற பெயர் வழக்கத்தில் வந்தது என்று கொள்ளலாம்.[6]

---

1. S. I. I, Vol. I p 99
2 South Indian Inscriptions Vol. I No. 64-76
3. Annual Report on Epigraphy, 1907 65 to 69
4. Colas p 132
5. Political Geography of Cola Country p 77
5.a S. I. I. Vol XIX p 45
6. செங்கம் நடுகற்கள்

கி. பி. ஆரும நூற்ருண்டிலிருந்து பத்தாம் நூற்ருண்டு வரை கிடைத்துள்ள நடுகற்கள் இந்நூலில் பதிப்பிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பல நடுகற்கள் பண்டைய பல்குன்றக்கோட்டத்துள் எடுக்கப்பட்டுள்ளன. தந்திவர்மன் காலத்து நடுகல் ஒன்றில் 'பல்குன்ற கோட்டம் என்ற பெயர் காணப்படுகிறது



வீணாதரர்; தஞ்சைக் கலைக்கூடம்; முற்காலச் சோழர் காலம்;
கி. பி. 10-ஆம் நூற்றாண்டு

# கல்வெட்டில் ஐந்தெழுத்து

**க. குழந்தைவேலன்,** M. A. Dip. Epigraphy & Archaeology
கல்வெட்டாய்வாளர். தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

தருமபுரி மாவட்டம் அரூர் வட்டம் கம்பை நல்லூரில் ஒரு சிவன் கோயில் உள்ளது. இக் கோயிலை கி. பி. 13-ஆம் நூற்றுண்டில் மூன்றும் குலோத்துங் கனுக்குக் கீழ் தகடூர்ப் பகுதியை ஆட்சி புரிந்தவனும், அதிகமான் வழி வந்தவனு மான விலங்காமொழி விடுகாதழகிய பெருமான் கட்டினன் என்று அங்குள்ள பாடல் கல்வெட்டொன்று பறை சாற்றுகின்றது.[1]

இம்மன்னன் சிறந்த சிவ பக்தன் போலும்! சிவபிரானது ஐந்தெழுத்தை ஓதுவதில் விருப்பம் கொண்டுள்ளான் 'நமச்சிவாய வாழ்க', 'சொல்லுநா நமச்சிவாயவே' போன்ற திருப்பதிகங்கள் இவனைக் கல்வெட்டிலும் நமச்சிவாய' மந்திரத்தைப் பொறிக்கத் தூண்டியுள்ளது

நமச்சிவாய என இவன் எழுதியுள்ளது 'யந்திரம்' அல்லது சக்கரம்' என்று வழிபடுகிறேமே அதன் அமைப்பில் உள்ளது. பல கட்டங்களுக்குள் நமச் சிவாய எழுத்துக்களைப் பொறித்துள்ளான். இதிலிருந்து ஐந்து முறை நமச்சிவாய என படிக்கலாம். இதைப் படிக்கும் முறை கீழ் வருமாறு.

இதில் இடையிலுள்ள 'ந' வை மையமாகக்கொண்டு 'நமசிவாய' என் னும் திருவைந்தெழுத்து ஐந்துமுறை படிப்படியாகச் சக்கரம்போல அமைந் துள்ளது. கீழே கல்வெட்டு எழுத்துக்களின் மேல் உள்ள எண்கள் கல்வெட்டில் இல்லை. படிக்கும் முறைக்காக கொடுக்கப்பட்டவை. கீழே கொடுக்கப்பட்டுள்ள எண்களின் எழுத்துக்களைச் சேர்த்துப் படித்தால் ''நமசிவாய'' என்னும் திருவைந் தெழுத்து எந்திரமுறை புலப்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| வா[1] | ம[2] | ய[3] | ந[4] | சி[5] |
| ந[6] | சி[7] | வா[8] | ம[9] | ய[10] |
| ம[11] | ய[12] | ந[0] | சி[13] | வா[14] |
| சி[15] | வா[16] | ம[17] | ய[18] | ந[19] |
| ய[20] | ந[21] | சி[22] | வா[23] | ம[24] |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 0 | 9 | 7 | 16 | 18 |
| 2. | 0 | 17 | 13 | 8 | 12 |
| 3. | 0 | 24 | 5 | 1 | 20 |
| 4. | 0 | 11 | 22 | 1 | 43 |
| 5. | 0 | 2 | 15 | 23 | 10 |

இதே போல் மற்றுமொரு சக்கரமும் உள்ளது. அதிலும் நமச்சிவாய என்ற எழுத்துகளும் சக்கர வடிவில் அமைக்கப்பட்டுள்ளன. இதிலும் 'நமச்சிவாய' என ஐந்துமுறை படிக்கலாம். ஆனல் இது கோட்டிற்குள் அமைக்கப் பட்டதல்ல இது படிக்கும் முறை:

| | | | | |
|---|---|---|---|---|
| ந 1 | சி 2 | ய 3 | ம 4 | வா 5 |
| ய 6 | ம 7 | வா 8 | ந 9 | சி 10 |
| வா 11 | ந 12 | சி 0 | ய 13 | ம 14 |
| சி 15 | ய 16 | ம 17 | வா 18 | ந 19 |
| ம 20 | வா 21 | ந 22 | சி 23 | ய 24 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 12 | 17 | 0 | 8 | 13 |
| 2. | 9 | 7 | 0 | 18 | 16 |
| 3. | 1 | 20 | 0 | 5 | 24 |
| 4. | 22 | 14 | 0 | 11 | 2 |
| 5. | 19 | 4 | 0 | 21 | 6 |

இதில் 'சி' யை மையமாகக்கொண்டு 'நமசிவாய' எனுந்திருவைந் தெழுத்தை ஓதலாம்.

மந்திரம் என்று கூறும் போது திருமந்திரமே நம் முன் தோன்றும். திருமந்திரத்தில் 'நமசிவாய' என்று பஞ்சாக்கரத்தை வைத்து பல சக்கரங்கள் வழிபாட்டிற்காகக் குறிக்கப்படுகின்றன, இவை நான்காம் தந்திரத்தில் இடம் பெற்றுள்ளன.



பெண் காட்டும் உருவான்; திருவெண்காடு; தஞ்சை மாவட்டம்;
இராஜராஜன் காலம்; கி. பி. 11-ஆம் நூற்றாண்டு

ஆனல் விலங்காமொழி விடுகாதழகிய பெருமாள் இக்கோயிலில் கல்வெட்டில் பொறித்துள்ள இரண்டு சக்கரங்களும் திருமந்திரத்தில் குறித்துள்ள சக்கரம் எதையும் ஒத்துக் காணப்படவில்லை. திருமூலர் குறித்துள்ள சக்கரங்களிலும் வேறுபட்டதாக புதிய அமைப்புடையதாக அமைத்துச் சிறப்பெய்தியிருக்கிருன் இம்மன்னன்.

இவன் விலங்கா மொழி என்று ஒரு பட்டமும் பெற்றிருந்தான். அப்பெயரையும் இதே போல் சக்கரம் போல் அமைத்து புதியன தோற்றுவிப்பதில் தனக்குள்ள ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளான்.

இதில் நடுவிலுள்ள 'வி' யை மையமாகக் கொண்டு வட்ட வட்டமாகப் படிக்கலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| மொ[1] | லங்[2] | ழி[3] | வி[4] | கா[5] |
| வி[6] | கா[7] | மொ[8] | லங்[9] | ழி[10] |
| லங்[11] | ழி[12] | வி[0] | கா[13] | மொ[14] |
| கா[15] | மொ[16] | லங்[17] | ழி[18] | வி[19] |
| ழி[20] | வி[21] | கா[22] | மொ[23] | லங்[24] |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| *1.* | *0* | *17* | *13* | *8* | *12* |
| *2.* | *0* | *9* | *7* | *16* | *18* |
| *3.* | *0* | *11* | *22* | *14* | *3* |
| *4.* | *0* | *2* | *15* | *23* | *10* |
| *5.* | *0* | *24* | *5* | *1* | *20* |

கி. பி. 13-ஆம் நூற்ருண்டிலேயே இது போன்ற சக்கரங்கள் சிறப்பைப் பெற்றிருந்தன என்பதற்கு இவை ஒரு சான்று.

# அட்டைப் படம்

இராகவன், இலக்குவன், மிதிலைச் செல்வி; பருத்தியூர், தஞ்சை மாவட்டம்; சோழர் காலம்; கி. பி. 10-ஆம் நூற்றுண்டு

---

# சந்திரசேகர பாண்டியர்

கிருஷ்ணதேவராயர் காலத்தில் சோழ நாட்டை 'வீரசேகர சோழன்' என்பவரும் பாண்டி நாட்டை "சந்திரசேகர பாண்டின்" என்னும் அரசரும் ஆண்டார்கள். சோழன் பாண்டியனைத் துரத்தி விட்டு பாண்டி நாட்டைக் கைப் பற்றிக் கொண்டான். பாண்டியனின் வேண்டுகோளின்படி கிருஷ்ணதேவராயர் தமது தானைத் தலைவர் நாகம நாயக்கரை தென்னுட்டுக்கு அனுப்பினர். நாகம நாயக்கர் சோழனை வென்று மதுரையைக் கைப்பற்றினர். இந்நாகம நாயக்கரின் மகனே மதுரையில் நாயக்கர் ஆட்சியை தோற்றுவித்த விஸ்வநாத நாயக்கர் என்று 'தஞ்சாவூர் ஆந்திர ராஜு சரிதம்' முதலிய நூல்களிலிருந்து அறிகிருேம். 'சந்திர சேகர பாண்டியன் என ஒரு அரசன் இருந்ததாகக் கல்வெட்டுகளில் குறிப்பு இல்லை. ஆதலின் இப்படி ஒரு பாண்டிய மன்னன் 16-ஆம் நூற்றுண்டில் மதுரைப் பகுதியில் இருந்தானு என்பது ஐயப்பாடு' என வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பர்.

புதுக்கோட்டை மாவட்டம் திருமெய்யம் தாலூக்கா திருக்குளம்பூரில் கதலீச்சுரர் கோயிலில் ஒரு கல்வெட்டு உள்ளது கல்வெட்டு சக வருடம் 1424 (1502 கி. பி.) எழுதப்பட்டது. அப்பொழுது விசயநகர அரசன் சாளுவ இம்மடி நரசிம்மராயர். இப்பகுதியின் தலைவனுயிருந்தவன் நரச நாயக்கர். இவ்வூர் சந்திர சேகரபாண்டி மண்டலத்து கேரள சிங்க வள நாட்டில் இருந்தது எனக் கல்வெட்டு கூறுகிறது. இதற்குமுன்னர் பாண்டி மண்டலம் ராஜராஜப் பாண்டி மண்டலம் எனப் பெயர் பெற்றிருந்தது. அது இப்பொழுது சந்திர சேகரப்பாண்டியன் என்பவன் பெயரால் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இது சற்றேறக் குறை கி.பி. 1500ல் நடந்திருக்க வேண்டும் இதிலிருந்து கிருஷ்ண தேவராயன் காலத்தில் இப்பகுதியில் சந்திரசேகர பாண்டியன் என்பவன் இருந்திருக்கிருன் என்பதை இக்கல்வெட்டு உறுதி செய்கிறது. (புதுக்கோட்டைக்கல்வெட்டுகள் எண். 722)

---

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறைக்காக டி துறையின் அச்சகத்தில் இத்துறை இயக்குநரால் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர் இயக்குநர் இரா. நாகசாமி.